★ ★

பாலக்காடு
**ஆர். வி. ஜி.**
பீடிகளை
உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

Registered at the G. P. O. as a Newspaper விலை சதம் 20

# ஈழநாடு
THE EELA NADU

வார மலர் — National Tamil Daily
மலர் 9 — இதழ் 72

பிலவங்க சித்திரை 11 முஹறம் 13 (24 4 67) திங்கட்கிழமை



மில்க் வைற்
நீல சோப், பார் சோப்
எல்லாவித துணிகளையும், அலுமினியப் பாத்திரங்களையும், கண்ணாடி வகைகளையும் ஆச்சரியப்படத் தக்க முறையில் சுத்தமாக்குகிறது.

# மாவட்ட சபை மசோதா மந்திரிசபை 27ந் திகதி பரிசீலனை செய்யும்

## விண்வெளியில் பூவலம் வரும் சோவியத் வீரர்

மாஸ்கோ, ஏப். 22
சோவியத் விண்வெளி வீரர் ஒருவர் இப்பொழுது விண்வெளியில் பூமியைச் சுற்றிவந்துகொண்டிருக்கிறார்.

சென்ற இரண்டு வருடங்களுக்குள் நேற்று முதல் தடவையாக சோவியத் யூனியன் ஒரு விண்வெளிக் கப்பலை விண்வெளிக்கு அனுப்பியது. குளோரோமோவ் என்னும் விண்வெளிவீரருடன்சென்ற இந்தக் கப்பல் பூமியில் இருந்து சுமார் 150 மைல் உயரத்தில் பூமியை வலம் வந்துகொண்டிருக்கிறது. இதேசமயம் மற்றுமொரு விண்வெளிக்கப்பலையும் சோவியத்யூனியன் விண்வெளிக்கு அனுப்புமென எதிர்பார்க்கப்படுகிறது.

## நாவலருக்கு கோவில் அமைக்க முடிவு

யாழ்ப்பாணம், திங்கள்
"தமிழும் சைவமும் ஒருங்கே தழைத்தோங்க தம் வாழ்நாளை அர்ப்பணித்த ஆறுமுகநாவலர் பெருமானுக்கும், ஞானப்பிரகாச சுவாமிகளுக்கும் சைவபரிபாலனசபையினர் கோவில் அமைக்க எண்ணியுள்ளார்கள். இந்த எண்ணம் நிறைவேற தமிழ் இந்துமத மக்கள் ஒவ்வொருவரும் இச்சபைக்கு உதவி அளிக்க வேண்டும்."

மேற்கண்டவாறு சைவ பரிபாலன சபையினரின் ஆதரவில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சைவமகாநாட்டின் இரண்டாம்நாள் நிகழ்ச்சிக

[12-ம் பக்கம் பார்க்க]

## சீனாவில் மூவருக்கு தூக்கு

ஹொங்கொங், ஏப்ரல் 23
பீகிங் முன்னாள் மேயர், முன்னாள் கலாசார மந்திரி மற்றுமிருவருக்கும் தூக்குத் தண்டனையை சீன அதிபர் மா-சே-துங் வழங்கியிருப்பதாக இங்கிருந்து கிடைத்த செய்தி ஒன்று கூறுகிறது.

## கோரிக்கை

லண்டன், ஏப்ரல் 23
ஏடனில் அவசரகால நிலைமையை நீக்கி, கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு மூவரடங்கிய ஐ.நா தூதுக்குழு பிரிட்டனைக் கோரியுள்ளது.

பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் இந்தத் தூதுக்குழு பேச்சு வார்த்தை நடாத்திய போதே இந்தக் கோரிக்கையை விடுத்தது.

கொழும்பு, ஞாயிறு
அடுத்த வியாழக்கிழமை நடைபெறும் மந்திரிசபைக் கூட்டத்தில் மாவட்டசபைகள் மசோதா சமர்ப்பிக்கப்பட்டு பூரணமாக விவாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் செவ்வாய்க்கிழமை தமிழரசுக் கட்சித்தலைவர்கள் பிரதமரை மீண்டும் சந்தித்துப் பேசுவார்களெனத் தெரியவருகிறது. இச்சந்திப்பின் போது மாவட்டசபைகள் நகல் மசோதாவை ஆரய்ந்துவரும் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, நிதிஅமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயகா, உணவு அமைச்சர் திரு. எம். டி. பண்டா ஆகியோர் மசோதாபற்றித் தங்கள் கருத்தைத் தெரிவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதே சமயம் மாவட்ட சபைகள் மசோதா பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு எவ்விதம் எதிர்ப்புத் தெரிவிப்பதென்பதுபற்றி எதிர்க்கட்சியினர் இவ்வார ஆரம்பத்தில் கூடி ஆராயவிருப்பதாகவும் தெரிகிறது.

## ஆகஸ்டில் இந்திரா வருவார்

கொழும்பு, ஞாயிறு
இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஆகஸ்ட் மாதம் இலங்கைக்குவிஜயம் செய்வார்.

**சிங்கம் மார்க் சந்தனத் தைலம்**
தான் வேண்டுமென்று!
**நீங்கள் கேளுங்கள்!**
ஈழவள நாட்டிலே
எங்குமே கிடைக்கும்!!

**அருந்துங்கள்!**


பால் சபையின்
நீண்டகாலம்
பாவிக்கக்கூடிய
**பால்**
குளிர்ச்சியூட்டத்
தேவையற்ற
பால்
யாழ்ப்பாணத்தில் எங்கும் கிடைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# இருகட்சிகளுக்குள் ஒற்றுமை முயற்சி; சிறிமா-டட்லி சந்திப்பு

## ஒரு தமிழர் இங்கு பிரதமராக முடியாதா?

### அண்ணாவின் விளக்கம்

### சிலர் கண்ணைத் திறக்குமா?

கட்சி அரசியல் முறை இலங்கையில் குடும்பங்களுக்குள்ளேகூட வேற்றுமையை ஏற்படுத்தியிருக்கிறதென்றும் நாடு முன்னேற்றம் பெறுமல் பின்தங்கியிருப்பதற்கும் மக்கள் பிளவுபட்டு நிற்பதற்கும் கட்சிஅரசியல் முறைதான்காரணமென்றும் பலரும் பகிரங்கமாக அபிப்பிராயம் கூறத்தொடங்கியிருக்கின்றனர். பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் நல்ல அம்சங்கள் நிறைய இருப்பினும் சில அம்சங்கள் நாட்டுக்கு நன்மைசெய்வதாக இல்லையென்றும் இவற்றில் திருத்தம் செய்வது பற்றி ஆலோசனை செய்வது நல்லதென்றும் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன சிலமாதங்களுக்கு முன் கருத்துவெளியிட்டிருந்தார்.

முன்னாள் மந்திரியும் முஸ்லிம் தலைவர்களில் ஒருவருமான டாக்டர் எம். ஸி. எம். கலீல் சில தினங்களுக்குமுன் ஒரு வைபவத்தில் பேசுகை



யில், கட்சி அரசியல் முறை இங்கு பெரும் தீங்குகளுக்கு காரணமாக இருப்பதாகவும் ஜனநாயக ஆட்சி அமைப்பு முறையில் சில மாறுதல் செய்வதுபற்றி ஆலோசிக்க வேண்டிய சமயம் வந்துவிட்டதென்றும் அபிப்பிராயம் தெரிவித்திருந்தார். மாவட்ட நீதிபதி ஒருவரும் சமீபத்தில் ஒருவைபவத்தில் பேசுகையில், கட்சிஅரசியல் முறை நாட்டில் வேற்றுமைகளை அதிகரித்துவருவதாகத் தெரிவித்திருந்தார்.

நாட்டின்நலனையும் நாட்டு மக்கள் நலனையும்விட கட்சி நலனையே பெரிதாக நினைப்பவர்களே நம்மிடையில் அதிகரித்துள்ளனர். கட்சி அரசியலும்பார்லிமெண்டரி ஜனநாயகமுறையும் நாட்டின் நலனுக்காக உபயோகிக்கப்படடால் நாட்டுக்குத் தீங்கு ஏற்படமாட்டாது. நாட்டின் நலனைவிட கட்சி நலன் பெரிது என்ற மனப்பான்மை நீடிக்கும் வரை நாட்டுக்கு நன்மை கிடைப்பது சுலபமல்ல. உணவு நெருக்கடி போன்றதேசீயப் பிரச்னைகளில் கூட கட்சிகளுக்குள் ஒன்றுபட்ட மனப்பான்மை ஏற்படவில்லையெனில் கட்சி அரசியல் முறைபற்றிசந்தேகம்தோன்றுவது இயல்பு.

### பீடாதிபதிகள் ஒற்றுமை முயற்சி

மொழியும் அரசியல் பிரச்னையானதைத் தொடர்ந்து அரசியலில் பௌத்த மதகுருமாரும் ஈடுபடத் தொடங்கினர். இன்று சகல பிரச்னைகளும் அரசியலாகி பௌத்த துறவிகளும் கூட கட்சி அரசியலுக்குள் சிக்கி வேறுபட்டு நிற்கின்றனர். இலங்கையின் பௌத்த பீடங்களான மல்வத்தைமத பீடமும் அஸ்கிரிய மத பீடமும் கூட கட்சிப் போட்டிக்குள் இறங்கிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இதேசமயம்இருபெரும் கட்சிகளுக்குள் ஒருவித ஒற்றுமையை ஏற்படுத்தினல் பெரும்பயன் கிடைக்கலாமென்ற அபிப்பிராயத்தை கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை வெளியிட்டார். இதற்காக அவர் முயற்சியும் செய்து வந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் யு. என். பி. யும் ஒற்றுமைப்பட்டால் பல பிரச்னைகள் தீரும் என்பது அவர் கருத்து. அவரது ஒற்றுமை முயற்சிக்கு பிரதமர் டட்லியின் ஆதரவு இருப்பதாகவும் அரசியல் வட்டாரங்களில் கருத்து நிலவியது. திரு. இரியகொல்லையின் 'ஒற்றுமை' முயற்சிக்கு அரசாங்கக்கட்சியிலுள்ள சிலரினதும் எதிர்க்கட்சியிலுள்ள சிலரினதும் ஆதரவு கிடைத்தது. 'கட்சிப்போட்டிகளினல் நாடுபாழாகிறது' என்று கவலைகொண்ட மற்றும் பலரும் இந்த முயற்சியை ஆதரிக்கின்றனர்.

திரு. இரியகொல்லையும், 'ஒற்றுமை முயற்சி'யை ஆதரிக்கும் மற்றும் சிலரும் இரு பெரும் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமைவேண்டுமென்பதற்கு முக்கியகாரணமாக இருப்பது, அரசாங்கத்தை ''தமிழர்கள்'' ''ஆட்டிப்படைக்காமல்'' இருக்கவேண்டுமென்பதுதான். இருபெரும் கட்சிகள் ஒற்றுமைப்பட்டால் தமிழரசுக்கட்சியின் 'கோரிக்கைகளை'யோ நிபந்தனைகளையோ ஏற்கவேண்டிய அவசியமேற்படாதென்பது அவர்களது கருத்து. தமிழ் மொழிச்சட்ட [விசேஷ]விதிகள், இந்திய வம்சாவழியினர் சம்பந்தமான இல



ங்கை—இந்திய ஒப்பந்த அமுல், மாவட்டசபைகள் மசோதா ஆகியவைகளில் 'தமிழரின் செல்வாக்கு' இருப்பதால்தான் சங்கடம் இருப்பதாகவும்'இருபெரும் கட்சிகள்' ஒன்றுபட்டால் இந்தப் பிரச்னைகளைப்பற்றி அஞ்சவேண்டியதில்லையென்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

இந்த மனப்பான்மையோடுதான் ஒற்றுமை முயற்சி ஆரம்பமானதென்றாலும் கட்சி வேறுபாடுகளை நீக்கி நாட்டின் நலனைக் கருதி ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டுமென்ற ஆர்வம் பலர் மனத்திலும் தோன்றி அதற்கான உருப்படியான முயற்சிகள் நடைபெறவிருக்கின்றன.

இம்மாதம் 25-ந் திகதி அதாவது நாளை மறுதினம் அரசியல் தலைவர்களும் பௌத்தமத குருமார்களும் கூடிப் பேசவிருக்கின்றனர். இதேசமயம் 'ஒற்றுமை' வெறும் பௌத்த ஒற்றுமையாக இருக்காமல் சகல கட்சிகளையும் சகல இன, மதமக்களையும் கொண்டதாக இருக்கவேண்டுமென்ற அபிப்பிராயமும் செனட்



சபைத் தலைவர் ஏ. ரத்னாயகா போன்றோரிடமிருந்து வெளிவந்திருக்கின்றது.

பெரும்பான்மைச் சமூகத்தவர்களுக்குள் மட்டும் ஒற்றுமையை ஏற்படுத்தாமல் பெரும்பான்மை சிறுபான்மை என்ற வேறுபாடின்றி இலங்கையருக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தும் முயற்சி நல்லது; வரவேற்கத்தக்கது. இந்த முயற்சி வெற்றிபெறவேண்டும்.

### சிறுபான்மை மக்கள் ஐக்கியம்

மல்வத்தை, அஸ்கிரியமத பீடத் தலைவர்களும் சேர்ந்து அரசியல்கட்சிகளுக்குள் ஒற்றுமை ஏற்படுத்த முயற்சி நடைபெறும் இச்சமயத்தில் வேருவலை எம். பி. யான ஜனுப் எம். ஏ. பாக்கீர் மாக்கார், சிறுபான்மை இனத்தவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுத்துவதற்கு ஒரு மகாநாட்டைக் கூட்ட முயற்சி செய்வதாக ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. [illegible] மலையர், பறங்கியர் என சிறுபான்மை இனத்தவர் பிரிந்து வேறுபட்டு நிற்பது சிறுபான்மைச் சமூகத்தினருக்கு மட்டுமல்ல இந்நாட்டுக்கே பாதகமானதுதான். ஆனல் தமிழருக்குள்ளேயே பல கட்சிகளும், பல பிரிவுகளும் இருக்கின்றது. அவர்கள் எந்தவிஷயத்திலும் ஒற்றுமைப்படுவதாகக் காணேம். தமிழரின் உரிமைகள் பறிக்கப்பட்டுவந்தபோதிலும் அவர்கள் ஒன்றுபட்டுநிற்கவில்லை. இந்நிலையில் சிறுபான்மைச் சமூகங்கள் அனைத்தும் ஐக்கியப்படுமா? ஒன்றுபட்டால் நல்லதுதான். இருக்கும்கட்சிகள் போதாதென்று இன்னெருகட்சியும் தோன்றவிருக்கும் இச்சமயத்தில் இந்த ஒற்றுமைமுயற்சிஎப்படிமுடியுமோ. ஒற்றுமை முயற்சி வெற்றிபெறவேண்டும். அதை யார் செய்தாலும் அனைவரும் அதற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டும்.

### சிறிமா-டட்லி சந்திப்பு

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பிரச்னை சம்பந்தமான இலங்கை-இந்திய [சிறிமா - சாஸ்திரி] ஒப்பந்தத்தை அமுல்நடத்துவது சம்பந்தமாக எதிர்க்கட்சித்தலைவரும் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட அப்போதைய இலங்கைப் பிரதமருமான திருமதி சிறிமா பண்டாரநாயகாவுடன் இன்றைய பிரதமர் திரு. டட்லி சேனநாயகா சந்தித்துப் பேசவிருக்கிறார். அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்த இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஆகஸ்ட் மாதத்தில் இங்கு விஜயம் செய்யவிருக்கிறார். அவருடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. எம். ஸி. சக்ளாவும் இங்குவருவாரென எதிர்பார்ககலாம். இங்கு வரும்இந்தியப்பிரதமருடன் இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் பற்றிப்பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்திருமதி சிறிமா பண்டாரநாயகாவுடன் திரு. டட்லி ஆலோசனை செய்யவிருக்கிறார். இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரில் [9,75,000 என்ற மதிப்பின்படி] 5,25,000 அதாவது ஐந்தேகால் லட்சம் பேர் இந்திய பிரஜா உரிமைபெற்று இந்தியாவுக்குத் திரும்பிச்செல்லவும் மூன்று லட்சம் மக்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கி இலங்கைப் பிரஜைகளாக்கிக்கொள்ளவும் இந்த ஒப்பந்தம் வகைசெய்கிறது. மிகுதி ஒன்றரை லட்சம் பேர்பற்றி பின்னர் ஆலோ



சனைசெய்வதென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடு முன் புதுடில்லியிலிருந்து கொழும்பிலிருந்த திரு. டட்லிசேனநாயகாவுடன் ஆலோசனை கலந்தபின்னரே திருமதி சிறிமா கைச்சாத்திட்டார். இந்த ஒப்பந்தத்தை அமுல்நடத்துவதில் திருமதி சிறிமாவின் கட்சிக்கும் திரு. டட்லியின் கட்சிக்கும் கருத்துவேற்றுமை இல்லை. ஆனல் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்யப்படும் இந்திய வம்சாவழியினருக்கு தனி வாக்காளர் ஜாபிதா வைக்க வேண்டுமென்பதும் இந்திய பிரஜாவுரிமை பெறுவோர் 'கட்டாயமாக' அனுப்பப்படவேண்டுமென்பதும், சிறிமா கட்சியினர் விருப்பமும் கொள்கையுமாகும். இதேசமயம் இந்த ஒப்பந்த அமுல்மசோதா இன்றுள்ள நிலையில் அமுல்நடத்தினல் பார்லிமெண்டில் தமிழரின் பிரதிநிதித்துவம் அதிகரித்துவிடுமென்றும், ஒரு தமிழர் அடுத்த பிரதமராக வருவாரென்றும் சிறிமாவின் கட்சியில் அங்கம்வகிக்கும் திரு. ஆர். ஜி. சேனநாயகா கூறிவருகிறார். அவர் ''நாம் சிங்களவர் இயக்கம்'' என்று ஒன்றையே அமைத்திருக்கிறார். இந்த நாட்டில் தமிழர் ஒருவர் பிரதமராக வரக்கூடாதென்று அரசியல் அமைப்பில் கூறப்படவில்லை. ஆர். ஜி. யின் கருத்தை திருமதி சிறிமா பண்டாரநாயகாவும் அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதனுடன்கூட்டுச் சேர்ந்துள்ள கட்சிகளும் ஏற்றுக் கொள்கின்றனவா? இதை அவர்கள் விளக்கிக் கூறவேண்டும்.

### காமராஜரும் அண்ணாவும்

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலத்தினசரிகளில் ஒன்றான 'டெயிலி மிரர்'பத்திரிகையின் ஆசிரியர் திரு. ரெஜி மைக்கல், திரு. கு. காமராஜரையும் தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரையையும் சந்தித்தது பற்றி சுவையாக தமது பத்திரிகையில் எழுதியிருக்கிறார். தமிழ் நாட்டில் காங்கிரஸ்அடைந்ததோல்வியும் தமக்கு ஏற்பட்ட தோல்வியும் காமராஜர் உள்ளத்திலிருந்துநீங்கவே இல்லையென்றும் ''ஆகட்டும்பார்க்கலாம்'' என்று வழமையாக எதற்கும் பதில் சொல்லும்

[12-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஷ்டிரபதி பதவிப்போட்டி

## சுப்பராவை தி. மு. க. ஆதரிக்கும்?

இந்திய ஜனாதிபதி (ராஷ்டிரபதி) தேர்தல் அடுத்த மாதம் அதாவது 6-ந் திகதி நடைபெறவிருக்கிறது. இப்பதவிக்கு மொத்தம் பதினேழுபேர் போட்டியிடுகின்றனர். இவர்களில் தற்போதைய உப ஜனாதிபதி டாக்டர் ஸாகீர் ஹுசெயினும் முன்னாள் பிரதம நீதிபதி திரு. சுப்பராவும் குறிப்பிடத்தக்கவர்கள். ஸாகீர் ஹுசெயின் காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் சுப்பராவ் எதிர்க்கட்சிகளின் சார்பிலும் போட்டியிடுகின்றனர். இவர்கள் இருவரையும் தவிர, பதினைந்துபேர் போட்டியிடுகின்றனர். ஸாகீர் ஹுசெயினுக்கும் சுப்பராவுக்குமிடையிலேயே தான் நெருக்கமான போட்டியிருக்குமாகையால் இதர அபேட்சகர்களைப்பற்றி அதிக அக்கறைகொள்ளத் தேவையில்லை. ஆயினும் காங்கிரஸ் அபேட்சகருக்குக் கிடைக்கக்கூடிய வாக்குகளிலும் சுப்பராவுக்குக் கிடைக்கக்கூடிய வாக்குகளிலும் ஒரு சிலவற்றையாவது இந்தப் பதினைந்துபேரும் பாதிக்கச் செய்யக்கூடும். உப ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகராக திரு. வி. வி. கிரியும் எதிர்க்கட்சிகள் சார்பில் அலிகார் பல்கலைக்கழகப் பேராசிரியர் முகம்மது ஹபீரும் போட்டியிடுகின்றனர்.

ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடும் டாக்டர் ஸாகீர் ஹுசெயினும் திரு. சுப்பராவும் அப்பதவிக்குத் தகுதியுடையவர்கள்தாம். இருவரும் அறிஞர்கள், அடக்கமானவர்கள். திரு. சுப்பராவ் பிரதம நீதியரசராகப் பதவியிலிருக்கும்போதே அவரை எதிர்க்கட்சியினர் சந்தித்துப் பேசியதும் அவரும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட விருப்பதாகச் செய்திகள் வெளிவந்ததும் இந்திய நீதிபரிபாலனத்துறையின் நற்பெயருக்கு நல்லதல்ல. எதிர்க் கட்சியினர் அந்த இரகசியத்தைக் காப்பாற்றியிருக்கவேண்டும் அல்லது நீதிபதி பதவியை ராஜினாமாச் செய்யும்வரையாவது சுப்பராவ் இரகசியத்தைக் காப்பாற்றியிருந்திருக்க வேண்டும். எப்படியும் ராஷ்

## ஸாகீர் ஹுசெயின் வெற்றி வாய்ப்பு

டிரபதி பதவிக்குப் போட்டியேற்பட்டுவிட்டது. போட்டியின்றித் தெரிவு செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. முன்பு ராஷ்டிரபதி பதவிக்கு ஒருவரை காங்கிரஸ் தெரிவு செய்ததும் அவரே புதிய ராஷ்டிரபதி என்று தயக்கமின்றிக் கூறிவிடலாம். இன்றுள்ள நிலை அப்படியல்ல. ராஜ்யங்களிலும் மத்தியிலும் காங்கிரஸின் பலம் குறைந்துள்ளது. எந்தச் சமயத்தில் எந்த ராஜ்யத்தில் காங்கிரஸ் அங்கத்தவர்கள் கட்சிமாறி அரசாங்கத்தை வீழ்த்துவார்களென்று சொல்ல முடியாத நிலை உள்ளது.

பார்லிமெண்டிலும் ராஜ்ய சட்டசபைகளிலும் காங்கிரஸின் பலம் குறைந்துள்ளபோதிலும் எதிர்க்கட்சிகளைவிட காங்கிரசுக்கு ஐம்பதினாயிரம் வோட்டுக்கள் அதிகமாக இருப்பதாக காங்கிரஸ் கருதுகிறது. லோகசபை, ராஜ்யசபை, ராஜ்ய சட்டசபைகள் ஆகியவற்றின் அங்கத்தினர்கள் எண்ணிக்கையைக் கணக்கிட்டால் ராஷ்டிரபதி தேர்தலுக்கு மொத்தம் 8,45,000 வோட்டுக்கள் இருக்கின்றன. இதில் காங்கிரசுக்கு 4,51,000 வாக்குகளும் எதிர்க்கட்சிகளுக்கு 3,94,000 வாக்குகளும் இருக்கின்றன என்று கணக்கிடப்படுகிறது. லோகசபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை 513. ஏழு ஸ்தானங்களுக்கான தேர்தல் நடைபெறவேண்டியிருப்பதால் 520 பேர்தான் வாக்களிப்பர். டாக்டர் ஸாகீர் ஹுசெயின் ராஷ்டிரபதியாகத் தெரிவு செய்யப்படுவது நிச்சயம் என்று காங்கிரஸ் வட்டாரங்கள் நம்பிக்கை கொண்டிருப்பினும் ஹரியானா, உத்தரப் பிரதேசம் காட்டிய வழியைப் பின்பற்றி மேலும் சில ராஜ்யங்களில் காங்கிரஸ்காரர் காங்கிரஸை விட்டு வெளியேறக்கூடுமென்றும் பார்லிமெண்டிலும் சில காங்கிரஸ்காரர் காங்கிரஸ் அபேட்சகருக்கு வாக்களிக்காமல்விடக்கூடுமென்றும் எதிர்க்கட்சியினர் எதிர்பார்க்கின்றனர்.

### முஸ்லிம் லீக் ஆதரவு

எதிர்க்கட்சிகள் ராஷ்டிரபதி பதவிக்கு திரு. சுப்பராவை நிறுத்தியுள்ளபோதிலும் சென்ற பொதுத்தேர்தலில் பல ராஜ்யங்களில் எதிர்க் கட்சிகளுக்கிடையில் கூட்டணி அமைத்துக் கொண்ட இந்திய முஸ்லிம் லீக் தமது ஆதரவை திரு. சுப்பராவுக்கு அளிக்கவில்லை; தங்களைக் கலந்து ஆலோசிக்காமல் திரு. சுப்பராவையும் உபராஷ்டிரபதி பதவிக்கு ஜனாப் ஹபீபையும் நியமித்திருப்பதால் தாங்கள் அவர்களை ஆதரிக்கவில்லையென்று முஸ்லீம் லீக்கினர் கூறுகின்றனர். ராஷ்டிரபதிபதவிக்கு டாக்டர் ஸாகீர் ஹுசெயினையே தாங்கள் ஆதரிப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். டாக்டர் ஸாகீர் ஹுசெயின் ஒரு முஸ்லிமாக இருப்பதாலும் இதுவரை உப ராஷ்டிரபதியாக ஒரு முஸ்லிம் இருந்து வந்திருப்பதால் இனியும் உபராஷ்டிரபதியாக ஒரு முஸ்லிமைத் தெரிவுசெய்வதற்கு ஆதரவளிப்பதைவிட ராஷ்டிரபதி பதவிக்கு ஒரு முஸ்லிம் வருவதை முஸ்லிம் லீக்கினர் விரும்புவது இயல்பு. டாக்டர் ஸாகீர் ஹுசெயின்ஒரு முஸ்லிமாக இருப்பதால் தான் ஜனசங்முதலியஎதிர்க்கட்சிகள் அவர் ரா[illegible]யாவதை விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. முஸ்லிம் லீக், காங்கிரசை எதிர்த்தபோதிலும்டாக்டர் ஸாகீர் ஹுசெயினை ஆதரிப்பதால் ஜனசங்கத்தின்போக்குக்கு 'காரணம்' கூறுவதற்கு இடமில்லை.

ராஷ்டிரபதி தேர்தலில் எதிர்க்கட்சிகள் எல்லாம் தங்கள் ஆதரவு யாருக்கு என்பதை இப்போதே தெளிவுபடுத்திவிட்டன. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் இன்னும் இது பற்றி ஒருமுடிவுக்கு வரவில்லை. தேர்தல் நடைபெறுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர்தான் அது, இது பற்றி ஒருமுடிவுசெய்யுமென்று தெரிகிறது. இப்போதுள்ள நிலையில் தி. மு. கழகத்தின் ஆதரவு யாருக்குக் கிடைக்கும்என்றுசொல்வதில் அதிக கஷ்டமில்லை.

ராஷ்டிரபதி பதவியில் டாக்டர் ராதாகிருஷ்ணனே தொடர்ந்திருக்க வேண்டுமென்று தி. மு. கழகம்விரும்பியது. மீண்டும்ராஷ்டிரபதி பதவிக்கான தேர்தலில்தாம் போட்டியிட விரும்பவில்லை என டாக்டர் ராதா கிருஷ்ணன் தெரிவித்த போதிலும் தி. மு. கழகப் பிரமுகர்கள் அவரைச் சந்தித்து மீண்டும் தேர்தலில் நிற்க வேண்டும் என்று கோரினர். தி. மு. கழகத்தினர் மட்டுமல்லாது காங்கிரசைச் சேர்ந்தவர்கள் சிலரும் எதிர்க்கட்சியினர் பலரும் டாக்டர் ராதா கிருஷ்ணனே ராஷ்டிரபதி பதவியில் நீடிக்கவேண்டுமென விருப்பம் தெரிவித்தனர். டாக்டர்ராதாகிருஷ்ணனும்தனது முடிவைமாற்றிக் கொள்வதற்குத் தயாராக இருந்தார். எனினும் காங்கிரசுக்குள்ளேயே இரண்டுபட்ட அபிப்பிராயம் தோன்றியதும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் 'வேறு ஒருவரை' ராஷ்டிரபதி பதவிக்கு அபேட்சகராகநிறுத்த முயற்சி செய்ததும், 'உபராஷ்டிரபதி பதவியில் தொடர்ந்திருக்க விரும்பவில்லை' என்று டாக்டர் ஸாகீர் ஹுசெயின் கூறியதும் டாக்டர் ராதா கிருஷ்ணன் மீண்டும் ராஷ்டிரபதி பதவிக்குப் போட்டியிடுவதில்லையென்றஇறுதிமுடிவை மேற்கொள்வதற்குக்காரணமாக இருந்தது. டாக்டர் ராதாகிருஷ்ணன் மீண்டும் நிறுத்தப்பட்டிருந்தால் எதிர்க்கட்சியினர் திரு.சுப்பராவை போட்டிக்குஇழுத்துவிட்டிருக்க மாட்டார்கள். திரு. சுப்பராவ் ஆந்திராவைச்சேர்ந்தவர், தென்னாட்டவர். அதாவது தி. மு. க. பாஷையில் சொன்னால்அவர் ஒரு திராவிடர். எதிர்க்கட்சியினர் அவரைத் தங்கள் அபேட்சகராக நிறுத்தியிருந்தாலும் அவர் ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர் அல்லர். இவை தவிர மாகாண ராஜ்யங்களுக்கு அதிக அதிகாரமும் சுதந்திரமும் வழங்கப்பட வேண்டுமென்ற [illegible] அதிக அதிகாரமும் சுதந்திரமும் வழங்கப்படவேண்டுமென்பது தி. மு. க. வின் கொள்கையும் கோரிக்கையுமாகும். காங்கிரஸல்லாத கட்சிகள் ஆட்சிபுரியும் மாநிலங்களும் காங்கிரஸ் ஆட்சிபீடத்திலுள்ள மாநிலங்களும் கூட இதை ஆதரிக்கின்றன. எனவே டாக்டர் சுப்பராவுக்கு திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஆதரவு கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம். இவை தவிர பிரதம மந்திரி வட இந்தியராக இருந்தால் ராஷ்டிரபதி தென்னிந்தியராக இருப்பது விரும்பத்தக்கதென்று, ராதாகிருஷ்ணன் ராஷ்டிரபதியாகத் தெரிவு செய்யப்பட்ட சமயத்தில் கூறப்பட்டது. பிரதமராக இருக்கும் திருமதி இந்திராகாந்தி வட இந்தியராகையால் தென்னிந்தியரான சுப்பராவை காங்கிரஸ்காரர்கள் சிலரும் ஆதரிக்க முன்வரக்கூடும்.

உபராஷ்டிரபதி பதவிக்கு முகம்மது ஹபீரை எதிர்க்கட்சியினர் நிறுத்தியிருப்ப

## தி. மு. க. ஆதரவு யாருக்குக் கிடைக்கும்?

தற்கு, டாக்டர் ஹுசெயினை தாங்கள் எதிர்ப்பதற்கு இனமோ, மதமோ காரணம் அல்ல என்பதை எடுத்துக் காட்டுவதற்காக என்றே சொள்ளலாம். டாக்டர் ஸாகீர் ஹுசெயினை ராஷ்டிரபதியாகத் தெரிவு செய்வதற்கு எதிர்க்கட்சியினர் மத்தியிலுள்ள எதிர்ப்புப் போன்று உபராஷ்டிரபதி பதவிக்கு திரு. வி. வி. கிரியைத் தெரிவு செய்வதற்கு இருப்பதாகத் தெரியவில்லை.

ராஷ்டிரபதி பதவிக்கு டாக்டர் ஸாகீர் ஹுசெயின் தெரிவு செய்யப்படாமல் திரு. சுப்பராவ் தெரிவு செய்யப்பட்டால் திருமதி இந்திராகாந்தியின் மந்திரிசபை ராஜினாமாச் செய்ய நேரிடலாம். ஆனால் ராஷ்டிரபதி பதவிக்குப் போட்டியிடும் ஒருவர் இதுவரை கடைப்பிடித்துவந்த சம்பிரதாயங்களை திரு. சுப்பராவ் கடைப்பிடிக்காததால் திருமதி இந்திராகாந்தியின் மந்திரிசபை சம்பிரதாயங்களைப் பின்பற்றவேண்டுமா என்ற கேள்வியும் எழலாம்.

# உலக மேடை

எஸ். எம். ஜி.

### இரேக்க புரட்சி

தத்துவஞானியையும் அரசியல் ஞானியையும் உலகுக்களித்து பெருமை பெற்ற கிரேக்க தேசம் அந்நிய படையெடுப்புக்களுக்கெல்லாம் தப்பி மீண்டும் தலைநிமிர்ந்து வாழ்ந்தாலும் அதன் சரித்திரத்தில் முதல் தடவையாகப் புரட்சி நடைபெற்றிருக்கிறது. இராணுவம்ஆட்சிநிர்வாகப்பொறுப்பையேற்றிருக்கிறது. '18 நாள்' பிரதமர் பனயோட்டிஸ் கனலோபோலஸ் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருப்பதுடன் அரசியல் தலைவர்கள் பலர் கைசெய்யப்பட்டிருக்கின்னர். நாகரிகத்துக்குப் பெயர்பெற்றுக்கொடுத்த கிரேக்க நாட்டில் இரண்டாவது உலக யுத்தத்தின்பின் அரசியல் நிலை ஸ்திரமற்றிருந்தபோதிலும் சென்றமாதக் கடைசியில் அரசியல்நெருக்கடி உச்சக்கட்டத்தை அடைந்தது. 1965 ம் ஆண்டு ஜூலை மாத மத்தியில் அச்சமயம் பிரதமராக இருந்த பப்பந்திரியோ இராணுவத்தில் களையெடுப்பு நடத்தமுயற்சி செய்தபோது மன்னருக்கும் அவருக்கும் ஏற்பட்ட கருத்துவேற்றுமையே தகராறாக வளர்ந்துஇந்த நிலைக்குக் கொண்டுவந்துவிட்டிருக்கிறது. அல்பேனியா, பல்கேரியா, யூகோஸ்லேவியா ஆகியசோஷலிஸ நாடுகளின் மத்தியில்முடியாட்சிநாடாக இருக்கும் கிரேக்கம் பெரும்பாலும் மலைகளும் நதிகளும் உடையது. இரண்டாவது உலக யுத்தத்தில் பெரிதும் சேதமடைந்த போதிலும் அந்நிய உதவியுடன் மக்களின் உழைப்பும் சேர்ந்து மீண்டும் முன்னேற்றப்பாதையில் கால் வைத்துக் கொண்டது.

இடதுசாரிக் கொள்கையுடைய பப்பந்திரியோ இளம் வயதான மன்னர் கொன்ஸ்டன்டைனுடன் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் இராணுவத்திலிருந்து வலதுசாரிகளை நீக்க வேண்டுமென்று யோசனையின் மீது கருத்து வேற்றுமை கொண்டார். இதனால் பதவியை ராஜினாமாச் செய்த பப்பந்திரியோ தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். ஸ்திரமான அரசாங்கம் அமைக்க முடியாத நிலையும் பப்பந்திரியோ தலைமையில் வன்முறைக் கிளர்ச்சிகள் நடைபெற்று வந்ததுமே இராணுவப் புரட்சிக்குக் காரணமாகும். இப்புரட்சியைமன்னர் கொன்ஸ்டன்டைனே நடத்தியிருக்கிறார் என்று கருதுவதற்கும் இடமுண்டு.

### இந்தியா கோரும் பாதுகாப்பு

அணு ஆயுத ஆபத்திலிருந்து அணுஆயுதங்களில்லாத நாடுகளுக்கு அணு ஆயுத வல்லரசுகள் பாதுகாப்பளிக்க வேண்டுமென்று இந்தியா கோருகிறது. அணு ஆயுத ஆபத்திலிருந்து பாதுகாப்பளிக்க அமெரிக்காவுடன் சேர்ந்தோ, தனியாகவோ தயாராக இருப்பதாக சோவியத் யூனியன் உத்தரவாத மளித்திருக்கிறதாம். இது சம்பந்தமாக அமெரிக்காவின் மனோநிலை இன்னும் தெரியவில்லை. இத்தகவலை 'அணு ஆயுத பாதுகாப்பு உத்தரவாதம்'கோரி மாஸ்கோவுக்கும் வாஷிங்டனுக்கும் சென்ற இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் விசேஷ பிரதிநிதி திரு. எல். கே. ஜா தெரிவித்திருக்கிறார். நவசீனாவும் ஓர் அணுஆயுத வல்லரசாக வளர்ந்து வருவதால் சீனாவைக்கண்டு இந்தியா அஞ்சுகிறது. இதில் நியாயமில்லாமலில்லை. அணு ஆயுதங்களை உற்பத்திசெய்து

[11-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சுருதி மாதா லயப் பிதா"

[கர்நாடக இசையாசிரியர் புத்தூக்க வகுப்புகளில் புல்லாங்குழல் வித்துவான் ஸ்ரீ ஆர். மூர்த்தி ஐயர் (பி. ஏ.) செய்த சொற்பொழிவின் சுருக்கம்]

சுருதி என்பதை விளங்கப்படுத்தும் பொழுது, அது காதால் கேட்கப்படும் ஓர் இனிய ஒலியைக் குறிக்கின்றது. 'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்' என்பதற்கு ஒப்ப செவிக்கு உணவு கொடுக்கும்பொழுது வயிற்றுக்கு உணவு இல்லாவிடினும் பரவாயில்லை என முன்னோர் கூற்று. விசுவாவசு முனிவரின் சித்தாந்தமும் சுருதி என்பதின் விளக்கம் கேட்கப்படும் இனிய ஒலி என்பதுதான். தமிழிசை வல்லுநர்கள் சுருதியை மிகப் பொருத்தமான வகையில் கேள்வி என்று பெயரிட்டு அதிலிருந்து தோன்றும் ஏனைய ஒலிகட்கு அலகுகள் என்று பெயரிட்டும் அழைத்துள்ளார்கள். சுருதி என்பதற்கு மற்றும் ஒரு பொருளுண்டு. சுருதி என்றால் நான்கு வேதங்களில் ஒன்றாகிய ரிக்வேதத்தைக் குறிக்கும். இறைவனைக்கூட சுருதிப் பொருள் என்று கூறுவதுண்டு. கோகள முனிவர் சுருதி என்பது கேட்கப்படும் ஒலி என்றும் அது ஏகம், அனேகம், வியாபகம், அதிவியாபகம், நித்யம் என்னும்ஐந்து பிரிவுகட்கு உட்படுகின்றனவென்றும், ஏகமெனில் ஒன்றாய்த் தனித்து விளங்குவதென்றும், அனேகம் என்பது பலவாயிருப்பதென்றும், வியாபகம் என்பது பரவலாக இருக்கின்றதென்றும், அதிவியாபகம் என்பது எங்கும் வியாபித்துள்ளதென்பதையும், நித்தியம் என்பது அழிவில்லாமலிருக்கின்றதென்பதைக் குறிப்பதாயும், சுருதியிலிருந்துதான் சுரங்கள் உண்டானவையென்றும் கூறுகின்றார். ரிக்வேதத்திலிருந்து ரிகமதநி என்னும் சுரங்கள் உண்டானதாகவும், நிலையாயுள்ள சட்ஜம் பஞ்சமத்தையும் சேர்த்து சாமவேததானமாக இராவணன் பாடி ஆண்டவனிடம் தம் இஷ்ட சித்திகளைப் பெற்றான் எனவும் ஆதி காவியங்கள் கூறுகின்றன. நிற்க சைதன்யர் சிவனின் பஞ்சமுகங்களாகிய சத்யோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசனம் எனும் முகங்களிலிருந்து ரி, க, ம, த, நி எனும் சுரங்கள் தோன்றியதாகவும், சக்தியின் செயலால் நிலையான சுரங்களாகிய சட்ஜம், பஞ்சமம் தோன்றி பஞ்ச சுரங்களுக்கு சக்தியை அளித்து சப்த சுரங்கள், (ஏழிசை)யாக இசையின் அத்திவாரமாக அமைந்தது என்று கூறுகின்றார். சக்தியில்லையேல் சிவம் இல்லை. சக்திக்குத்தான் செயலாற்றும் தன்மை. சக்தி வடிவாகிய சட்ஜம் அதாவது நிலையான சுருதியில்லையேல், சுரங்கள் இல்லை. சுரங்கள் இல்லையேல், ஸ்தாயி (நிலை)கள் இல்லை. நிலைகள் இல்லையேல், இராக பிரஸ்தாரங்கள் இல்லை. இராக பிரஸ்தாரங்கள் இல்லையேல் சங்கீதம் இல்லை. சுருதி என்பது ஆரம்ப அப்பியாசத்தில் சட்ஜம், பஞ்சமம் என்றும், பின் ரி, க, ம, த, நி என்றும், பின் ஒரு நிலையில் 12 தானங்கள் என்று பெயர் வழங்கும் 12 சுருதிகள் என்றும், பின் 22 சுருதிகள் என்றும், அதன்பின் அநேக சுருதிகள் என்றும் சங்கீத அப்பியாசிகட்கு புலனாவது உண்மை. சுருதி என்பதை குறிக்கும்கால் ஆதார சுருதியைத்தான் அது பொதுவாக குறிக்கின்றது. ஒவ்வொருவரும் தன் சாரீரத்திற்கு அல்லது வாத்தியத்துக்குத்தக்க ஒரு சுருதியை அமைத்துக்கொண்டு அதை ஆதாரமாகக்கொண்டு சுர, இராக சஞ்சாரங்கள் செய்வதுதான் பொருத்தம். அப்படி அமைந்த சுருதியுடன் தன் குரலை அல்லது வாத்தியத்தை ஒன்று சேர்த்து ஒலிக்கச் செய்வதும் அப்படி ஒன்று சேர்க்கும் செய்கையை லயிப்பது என்றும் கூறலாம்.

லயம் எனும் பதத்திற்கு இங்கு பொருள் ஒன்றிக் கலந்து இன்பம்காண்பது. சுருதியுடன் லயித்துவிட்டால் நிச்சயமாக அனுபவிக்கும் இன்பம் தெய்வீக இன்பமாகும். எல்லாவற்றிற்கும் ஆதாரமாக சுருதி அமைந்துள்ளபடியால் இதுதாயின்தன்மை என்பதில் வியப்பில்லை. லயம் எனும் சொல்லுக்கு தாளம் என்பது கருத்தல்ல. தாளம் லயத்தின் ஒரு அங்கம்தான். தனி இராக சஞ்சாரங்களினால் மட்டும் இசைபூர்த்தியடைந்துவிடுவதல்ல. இசை, இராகசஞ்சாரங்களுடன் கூடி. உட்கருத்தானது, பாவத்துடன் வெளிப்பட்டுக் கட்டுப்பாட்டுடன் கருத்தும், இசையும் ஒருமித்து மனச்சாந்தியுடன் இறைவனடிக்கு அர்ப்பணம் செய்வதுதான் இசையின் உண்மையும் இலக்கணமும். சக்தியிருந்தாலும் கட்டுப்பாடில்லாத எந்த காரியமும் வீண். ஆகவே சக்தியுடன் கட்டுப்பாடும் சேர்ந்தால்தான் செயல்படும். ஆகவே கட்டுப்பாட்டுக்குள் உள்ளவர் குடும்பத் தலைவனாகிய தந்தை. கட்டுப்படும் தன்மை லயமாகியிருப்பதால் லயத்திற்கு தந்தையின் தன்மை உள்ளது என்பதில் ஐயமில்லை.

தவக்கொழுந்து

# நடராஜானந்த அடிகளார்

— த. யோகநாதன் —

குருதேவர் காட்டிய வழியில்- விபுலானந்த அடிகளாரின் அருள்நோக்கில் துறவியாகி சமயத்திற்கும் கல்விக்கும் அயராதுபாடுபட்டவர் சுவாமி நடராஜானந்தர். இப்பெருந்தகைநம்மை விட்டுப்பிரிந்துசிலநாட்களே இவர் இறையடி சேர்ந்தமை ஈழத்திருநாட்டுக்கு, சிறப்பாக மட்டக்களப்புத்தமிழகத்திற்கு பேரிழப்பாகும்.

யான்பெற்றஇன்பம்வையகமும் பெறுகவென அன்பின் திருவுருவாய் - அரும்பணி ஆற்றி இன்பம் கண்ட, நடராஜானந்த அடிகளாரின் அறிவுரைகள் அன்றலர்ந்த மலர்போலக் காட்சியளிப்பன. ஆசிரிய உலகத்திற்கு அளப்பரிய தொண்டை தன்னலம் கருதாது செய்ததை இராமகிருஷ்ண சங்கப்பாடசாலை ஆசிரியர்கள் உயிருள்ளவரை மறக்கவேமுடியாது. விபுலானந்த அடிகளார் பிறந்த நாட்டில்பிறந்த இத்துறவி செய்வன திருந்தச் செய் என்ற சீரிய பண்பை சாதனையில் காட்டி மக்களை வழிப்படுத்தியவர்.

மட்டக்களப்பைச்சேர்ந்த காரைதீவில் பிறந்து, அவ்வூர்ப்பாடசாலையில் தமிழ் கற்று, கல்முனை சென். மேரிஸ் பாடசாலையில் ஆங்கிலம் கற்றுஇருமொழியிலும்வல்லவராக மிளிர்ந்தவர். மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆங்கிலத்தில் ஆய்கலைச்செல்வனாக விளங்கினார். உடன் மாணவர்கள் இவரை அன்பு காரணமாக "சீனி" என்ற செல்லப்பெயரால்அழைத்து வந்தனர். ஸ்ரீநிவாசன் என்ற பிள்ளைத் திருநாமம் மாற வேண்டுமென்பது இறைவன் கட்டளை போலும்.

திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் ஆசிரியனாகப் பணிபுரிந்த காலை இவருக்கு சீனி மாஸ்டர் என்ற பெயர் நிலை பெறுவதாயிற்று.

தனக்குப்பின் தாய்நாட்டில் சமயத்தை வளர்க்க, கல்வியைப்பெருக்க ஒருவர் வேண்டுமென்ற வேணவா விபுலானந்த அடிகளார் உள்ளத்தில் நன்கு படிந்திருந்தது.

ஸ்ரீநிவாசன் [சீனிவாசகம்] இதயப்போக்கு இராமகிருஷ்ணரின் நீழலில் படிவதை உணர்ந்த விபுலானந்த அடிகளார், இதுவே தருணமெனக்கண்டு துறவியாக வரப் பக்குவப்படுத்தினார்.

ஸ்ரீநிவாசன், சுவாமி நடராஜானந்தர் என்ற திவ்விய நாமம் பெற்று இலங்கை மணித்திருநாட்டுக்கு வந்தபோது, தமிழ்ப் பெருமக்கள் பெருமகிழ்வுடையாராய் இறும்பூதடைந்தனர். தவக்கொழுந்தே வருக என வாழ்த்தினார், விபுலானந்த அடிகளார். எங்கள் சமயசஞ்சீவி என வாழ்த்தி வணங்கி நின்றனர் மட்டக்களப்புத் தமிழகத்தார்.

காத்தற் கடவுளாகியகண்ணன் திருவுருவில் காணும் இவரது புன்னகை எம்மனோரை வாழவைத்தது.

[9-ம் பக்கம் பார்க்க]

### ஸ்திரபுத்தி

எவன் இறைவனைச் சார்ந்து, இந்திரியங்களைத் தன் வசப்படுத்திக்கொள்கிறானோ அவனே ஸ்திரபுத்தியுடையோனாகிறான்.

[''கீதா போதனை''யில் காந்தி அடிகள்]




சாளி! நான் கேட்டது இதுவல்ல! ஜின் என்று சொல்லும்போது நான் கேட்பது—

மெஸ்தியா ஜின்னையே

ஏனென்றால் . . . . . . ? ?

1. புதிய மெஸ்தியா ஜின் இரு முறை வடிக்கப்பட்டது.
2. புதிய மெஸ்தியா ஜின் வெற்றி கண்டதோர் விசேஷ வெளிநாட்டு முறைப்படி தயாரிக்கப்படுவது.
3. புதிய மெஸ்தியா ஜின் மிகப் புதுமையான பிரெஞ்சு யந்திரங்களால் செய்யப்படுவது.
4. புதிய மெஸ்தியா ஜின்கள் [கலப்பற்றதும், தோடம்பழ ரஸம் கலந்ததும்] மென்மையானவை — வெண்பட்டும் மஞ்சள் ஊதாவும் — ஆ! அதுதான்!
5. புதிய மெஸ்தியா ஜின்தான் 'கொக்டெயில்' பானத்துக்கு சிறந்த அஸ்திவாரம். அதுமட்டுமல்ல, சாளி! நீ நினைக்கமுடியாத 'கொக்டெயில்' எல்லாவற்றையும் அது உருவாக்கும்.
6. புதிய மெஸ்தியா ஜின் ரொம்ப ரொம்ப சுத்தமானது—வெறி அம்மல் என்பதே கிடையாது. ஆனபடியால்தான், மேனை சாளி, நான் ஜின் என்று சொல்லும் போது

புதிய மெஸ்தியா ஜின்னையே குறிப்பிடுகிறேன்

இங்கே காணப்படும் நமது நண்பர் உண்மையிலேயே ரசித்து மதுவை அருந்துபவர். புதிய மெஸ்தியா ஜின்னை தாம் விரும்புவதற்கு ஆறு காரணங்கள் கூறியிருக்கிறார். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:— புதிய மெஸ்தியா ஜின்னை நீங்கள் விரும்புவதற்கு உங்களுடைய சொந்த காரணம் என்னவென்பதை எழுதி புதிய மெஸ்தியா ஜின் போத்தல் லேபல் ஒன்றுடன் புதிய மெஸ்தியா போட்டி மே/பா. விஷன் விளம்பரங்கள் லிமிடெட், 3-வது மாடி, மாக்கான் மரைக்காயர் கட்டிடம், கொழும்பு—1 என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

எத்தனை சீட்டுகளாவது அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு சீட்டோடும் ஒருபுதிய மெஸ்தியா ஜின் லேபல் சேர்க்கப் படவேண்டும். பன்னிரண்டு பரிசுகள் கொடுக்கப்படும். முதலாவது பரிசு சிங்கப்பூருக்குப் போய்வர ஓர் இலவச விமானடிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு. மிகக் கூடுதலான சீட்டுகள் அனுப்புபவருக்கு சென்னைக்குப் போய்வர ஓர் இலவச விமானடிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு. ஒரு விசேஷ நீதிபதி குழுவின் தீர்ப்பே முடிவானது. ஸ்ரீலங்கா டிஸ்ரிலறீஸ் லிமிடெட், விஷன் விளம்பரங்கள் லிமிடெட் ஆகிய ஸ்தாபனங்களில் வேலை செய்வோரும் அவர்களுடைய குடும்பத்தினரும் இந்தப் போட்டியில் பங்குபற்றலாகாது. போட்டிமுடிவு திகதி மே 31, 1967.

சிங்கப்பூருக்கும் சென்னைக்கும்

மெஸ்தியாவுடன் பறந்து செல்லுங்கள்

10 ஆறுதல் பரிசுகள் உண்டு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெடுக, உலகியற்றியான்!

**— ஜி. அன்ரனி ராசையா —**

பின்னுறங்கி முன்னெழுந்துவிடும் கொழும்பு நகரத்தின்இரைச்சல் மருதானைரேட்டை சலசலப்பாக்கிக் கொண்டிருக்கிறது. 'பெமண்ட்' வியாபாரிகளின் குரலொலி, அதையும் சாகச்செய்து சத்தமிடும் புகையிரதங்களின் இரைச்சல், மருதானை ஸ்டேஷனிலிருந்து வெளிவருகிறது. புகையிரத நிலையத்துக்குள் பிரவேசிக்கும் கூட்டமும் வெளியேறும் கூட்டமும் சங்கமிப்பதால் ஏற்படும் சில நிமிடதாமதம்-அதைத் தமக்குச்சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு குரல் எழுப்பும்பிச்சைக்காரர் கூட்டம், பிக்பாக்கெட்காரர்கள்...

யத்துக்கெதிராக இருக்கும் டிராலி பஸ் ஸ்டாண்டை நோக்கி விரைகிறேன். ''ஆமர்ஸ்ரீட்டுக்குப்போகும்'கியூ'வில் பலருக்குப்பின்னுல் நான். ஸ்டேஷன் மணிக்கூண்டைப் பார்க்கிறேன். அது ஓடுகிறதா? பறக்கிறது! மணி ஒன்பதும் தாண்டிவிட்டது. ''ஆபீசுக்கு இன்றும் அரை மணிநேரம் 'லேட்' தான்.'' மனக்குறளி முணுமுணுக்கிறது.

''ஐயா ஏதாச்சும் தர்மம் பண்ணுங்க'' குரல் அருகில் ஒலிக்கிறது. பார்த்தேன்; முதுமையின் முத்திரையை முதுகில் சுமந்த கிழவன்—கூனிக்குறுகிய தோற்றத்தோடுஎன்னைப்பார்க்கிறுன்-தன் தகரக்குவளையைநீட்டு

கிழுத்தேன். ''என்ன ஸார், இவங்களைப்போலுள்ளவங்க வாழ்ந்துதான் என்னபயன்? இதையும்விட செத்தா நல்லதில்லையா? என்ன சொல்லுறீங்க''

அவர் எனது கருத்தை ஆதரிப்பவர்போல தலையை ஆட்டினுர்.

பிச்சைக்காரன் என்னை விட்டு நகர்ந்ததில் எனக்குக் கிடைத்த நிம்மதி, அவருடைய ஆமோதிப்பால் இன்னும் ஒருபடி உயர்ந்தது.

பஸ் வந்தது.

''கொட்டே ஹென, ஆமர்ஸ்ரீட்'' கண்டக்டர் குரல்எழுப்பினுன். கூட்டத்தில் முட்டிமோதிக்கொண்டு நானும் ஏறினேன்.

பஸ் நகர்ந்தது.

''ஐயா ஏதாச்சும் தர்மம் போடுங்கயா'' நான் வெறுக்கும் குரல்பஸ்ஸிற்குள்ளுமா? அதே கிழவன் எப்படியோ தொத்திக்கொண்டு ''பஸஞ்சர்''களுக்கும் தொல்லை

லிருந்து ஐந்து சதத்தை எடுத்து நீட்டுகிறுனே!

'ஆமர்ஸ்ரீற்'றில் நான் இறங்கினேன்.

''ஐயா''-கிழவனின் குரல்தான். கைகொடுத்து இறக்குவதற்கு உதவுமாறு வேண்டினுன்.

அவள் உடையே எடுத்துக் காட்டியது. எப்படியும் சொல்லிவிடவேண்டுமென்ற உள்மனத்தின் குறுகுறுப்பு.

''என்னுடைய 'மணி பர்ஸ்' பறிபோய்விட்டது, பஸ்ஸிற்குக்கூட இருபத்தைந்து சதமில்லாதநிலை.''

சூழலுக்குப் பயந்து கிழவனுக்குக் கைகொடுத்து உதவினேன்.

நான் ஆபீசை அடையும் போது, அரைமணி பிந்திவிட்டது.

வேலைசளை விரைவாகச் செய்துவிட்டு யோசனையில் மூழ்கினேன். பிள்ளைக்கு வாங்கிவரவேண்டிய துணிமணிகளுக்கும், வீட்டுச் சமையலுக்கான காய்கறிகளுக்குமாக மனைவி 'லிஸ்ட்' கொடுத்தனுப்பியிருந்தாள்.

மென்று விழுங்கினேன் வார்த்தைகளை.

அவள் முகத்தில் இரக்கத்தின் ரேகைகள் மொய்த்துக் கொண்டன. உள்ளே சென்ருள்.

சிறிது நேரத்தில் வேருேர் உருவம் என்னை நாடி வந்தது.

அது! ஆம், ஆமர்ஸ்றீற்றில் நான் கண்ட அதே பிச்சைக்காரக்கிழவன்.

என் தலைசுற்றியது!

இத்தனையும் கடந்து கொண்டுதான்கொழும்புநகரத்துக்குள் காலடி எடுத்து வைக்கவேண்டுமென்ற காலதேவனின் நியதி. இதற்குக் கட்டுப்பட்டவனுகத் தான் நானும் கொழும்பை நாடி வரவேண்டியிருக்கிறது. ஸ்டேஷனைவிட்டு வெளியே வந்தேன். புகையிரத நிலை

கிறுன். அவன் முகத்தைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவு அவலட்சணமான உருவம். பிச்சைக்காரர்கள் நாட்டில் இருக்கக்கூடாதென்ற என் லட்சியத்திற்கு இவனைப்போல் எத்தனைபேர் எமனுக இருக்கிறுர்கள்?

''ஊ...ஊம் போ, போ'' -என் குரல் அலட்சியமாக ஒலிக்கிறது. அவன் நகர்கிறுன்.

ஆனுல் மற்றவர்களிடமிருந்து சில்லறை விழுந்தவறவில்லை.

அவன் கரம்கூப்பிக்கும்பிடுகிறுன்.

---

முன்னுல் 'கியூ'வில் நின்றவரை நானுகவே பேச்சுக்

கொடுக்கிறுன். என் மனம் அவனைச் சபிக்கிறது.

எரித்து விடுபவனைப்போல் அவனைப் பார்க்கிறேன். அந்தப் பார்வையில் அவனுக்குக் கனிவு தோன்றியதோ! என்னைப் பார்த்துச் சிரிக்கிறுன்.

எனக்கு எரிச்சல் எரிச்சலாக வருகிறது. முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொள்கிறேன்.

''டிக்கட்'' -கண்டக்டரின் குரல்.

''ஆமர்ஸ்ரீட்''- சேட்டுப் பையிலிருந்த ஐந்துசதத்தை நீட்டுகிறேன்.

பிச்சைக்காரன் - அவனும் ஆமர்ஸ்ரீட்தானு! குவளையி

நேற்று எடுத்த சம்பளத்திற்கேற்ற செலவு இன்று.

ஆபீஸ் மணிக்கூண்டு ஐந்தைக் காட்டுகிறது.

நான் வெளியேறுகிறேன். புறக்கோட்டை மார்க்கெட்டை நோக்கி விரைகின்றேன்.

எனது மகள் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டு செல்வதற்கேற்ற அழகான 'பேக்' கடையொன்றில் தொங்கிக் கொண்டிருக்கிறது.

பேரம் பேசுகிறேன். ஒன்றேமுக்கால் ரூபாவுக்கு முடிவுகட்டிவிட்டேன். காலசட்டைப் பையில் கையை விட்டேன், பர்ஸைக் காணவில்லை! எங்கள் குடும்பத்தின் ஒருமாத வாழ்க்கையே அதற்குள்தானே அடங்கியிருந்தது.

''என் மணிபர்ஸை யாரோஅடித்துவிட்டான்''-கடைக்காரனைப் பார்த்தவாறே கூறினேன்.

வந்தவன் முகத்தைப் பார்த்தான். ''ஓஹோ நீங்களோ! என்ன தம்பி நான் தான் பிச்சையெடுக்கிறேன், அதுஎன்மகளைமானத்தோட வாழவைக்க வேண்டுமென்பதற்காக. கடவுள் என் நிலையை இப்படி வைக்காட்டா நான் இதை செய்ய மாட்டேன். உங்களுக்கு என்னங்க வந்தது? படிச்ச நீங்களெல்லாம் இப்படி வேலை செய்யாம நடக்கிறது உங்களுக்கேநல்லாஇருக்கா? தொழில் செய்யக்கூடிய வங்கை கைநீட்டி வாழக் கூடாது. உங்களுக்குஇருபத்தைஞ்சு சதத்தைஎப்படியும் எனக்குக் கொடுத்துடலாம். ஆனு அது சோம்பேறிசள பொய்க்காரங்கள வளர்க்கிறதா முடிஞ்சிடும். தயவு செஞ்சி என்னை மன்னிச்சிடுங்க'', கிழவன் கதவைச் சாத்திவிட்டு நடந்தான்.

என்உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. ''அட

## இவ்வாரச் சிறுகதை

அவனுக்கு அதில் நம்பிக்கை பிறக்கவில்லையென்பதை அவன் நமட்டுச் சிரிப்பு உறுதிப்படுத்தியது.

நடந்தேன், கால் போன போக்கில்.

இப்பொழுது வீட்டிற்குப் போவதற்கு பஸ்ஸிற்கும் பணமில்லையே! யாரிடம் கேட்பது?

இருபத்தைந்து சதமாவது இருந்தால் எப்படியும் வீடுபோய் சேர்ந்துவிடலாம், சில மைல்கள் நடந்தாவது. காட்டுப் பாதையைக் கடப்பதற்கு பஸ்ஸில்தான் போகவேண்டும். ''யாரிடம் கேட்பது?'' அநுபவமில்லாத பிச்சைக்கு என்னை ஆயத்தப் படுத்திக் கொண்டேன்.

தெருவின் திருப்பத்திலே ஒரு சிறிய கொட்டில் வீடு. உள்ளே யாரோ இருக்கிறுர்கள் என்பதற் கறிகுறியாக குரலொலி கேட்டது.

''ஏழையின் நிலை ஏழைக்குத்தான் தெரியும்'' என்ற பழமொழி எவ்வளவோ காலத்திற்குப் பின்னுல் என் மண்டையில் உதிக்கிறது.

கதவைத் தட்டினேன்.

ஒரு இளம்பெண்கதவைத் திறந்தாள்.

என்ன வேணும்...

அவளிடம் எப்படிச்சொல்வது? அவள்நிலை என்னைவிட மோசமானது என்பதை

கடவுளே, நானு ஏமாற்றுக்காரன்...? நானு பிச்சைக்காரன்...? இந்தக் கிழவன் என்னை இவ்வாறு கருதிவிட்டால் உலகத்தின் மயக்கத்தை எவ்வாறு கணிப்பது..?''

நான் நடந்தேன். இரவின் கோரப்பிடியில் உலகம் சிக்கித் தவிக்கும் வேளையில், மயக்கத்தின் பிடியிலிருந்து நான் தெளிவு பெற்ற நிலையோடு நடந்து கொண்டிருந்தேன்.

இரந்தும் உயிர்வாழ்தல்
வேண்டின்
பரந்து கெடுக
உலகியற்றியான்.

[யாவும் கற்பனை]

### அமைதி

நதிகளின் நீர் சதா வந்து விழுந்துகொண்டிருந்தும், கடலானது சதா அசையா நிலைகொண்டிருப்பதே போல் விஷய விருப்பங்கள் சதா வந்துவிழுந்து கொண்டிருப்பினும், யோகியின் மனம் மட்டும் எப்பொழுதும் அமைதியாகவே இருக்கும்.

[''கீதா போதனை''யில் காந்தி அடிகள்]

### கோபம்

கோபம் பைத்தியத்தின் பாதி. ஆதலால் கோபம் பிறந்த மாத்திரத்தில் நினைவு தவறிவிடுகிறது. நினைவு தவறியவுடன் புத்தி தடுமாற்ற மேற்படுகிறது. அத்தகைய மனிதன் முடிவில் நாசத்தையே அடைகிறுன்.

[''கீதா போதனை''யில் காந்தி அடிகள்]




உலகின் ஈடுஇணையற்ற சுகத்தைப்பெற
மெகவிட்டோன்

**விட்டமின் சத்துக்கள் கொண்ட குடும்ப டானிக்**

பலவீனம் - மெலிவு நரம்புத்தளர்ச்சி-களைப்பு? இதோ இருக்கிறது மெகவிட்டோன். பரீட்சித்துப்பார்த்து சிறந்ததென தலைமுறை தலைமுறையாக பாவிக்கப்படும் மெகவிட்டோன் உங்கள்உணவு உட்கொள்ளும்சக்தியை அதிகரித்து, உணவுகளை ஜீரணிக்க உதவுகிறது. உங்கள் நரம்புகளுக்கு போஷாக்கு சக்தியை அளித்து அமைதியாக நித்திரை செய்ய உதவுகிறது. உங்கள் உணவுக்கு விட்டமென்களையும், கனிஜ பொருட்களையும் அளித்து போஷாக்குமிக்க உணவாக்குகிறது. விரைவில் ஆரோக்கியத்தையும், பலத்தையும் பெறவும் ஈடு இணையற்ற சுகத்தைப்பெறவும் உதவுகிறது.




ஓரியண்டல் ட்ரக் ஸ்டோர்ஸ் லிமிட்டெ[illegible]
331, காலி ரோட், கொ[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே. பி. எச். எழுதும்

# யாத்திரைக் கடிதங்கள் – 4

**அன்புள்ள சரஸ்,**

குடுமித்தலை. அதற்கு மேல் ஒரு குல்லாய். நீலக் கோட்டு. இடுப்பில் நான்கு முழ கதர்வேட்டி. இந்தக் கோலத்துடனே மனதிலே ஏதேதோ எண்ணங்கள் பின்னல் போட்டுக்கொண்டுவர, சென்னை பிராட்வேயை நோக்கிச்சென்றேன்.

சென்னையில் மிகக் குறுகலான ஒரு தெருவுக்கு பிராட்வே (அகன்ற வழி) என்று ஏன் பெயரிட்டனர்? சைனு பஜார் தானே மிக அகன்ற வீதி. அதற்குத் தானே அந்தப் பெயர் இட்டிருக்க வேண்டும். சைனு பஜார் என்று ஏன் அதற்கும் பெயரிட்டனர்? ஒரு சீனரின் கடைகூட அங்கு காணவில்லையே, என்ற இந்த மாதிரி எண்ணங்கள் குறுக்கிட, பத்திரிகை அதிபர் என்னென்ன கேட்பாரோ, என்றயோசனைகளுடனே மௌனமாக சிவ மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே சென்றேன்.

அங்கு 'தமிழ்நாடு' காரியாலயத்தைக் கண்டுபிடிப்பது கஷ்டமில்லை. அந்தவீதியிலேயே உயர்ந்த சிவப்புக் கட்டிடம் அது. 'தமிழ்நாடு' என்றதும், இப்போது மதுரையிலிருந்து அதே பெயருடன் வெளிவரும் பத்திரிகை என்று நினைக்காதே. இரண்டுக்கும்ஒருசம்பந்தமுமில்லை. பழைய 'தமிழ்நாடு' 'தென்னாட்டுத் திலகர்' என்றுபுகழ்பெற்றசேலம் டாக்டர்வரதராஜுலுநாயுடு அவர்களால் முதலில் வாரப்பதிப்பாகவும், பின்னர் தினசரியாகவும் வெளிவந்து, சுதந்திரப் போராட்ட காலத்திலே வீர முழக்கம் செய்துவந்தது. அப்போராட்டத்திலே கலந்து பன்முறை சிறை சென்றதேசபக்தர் டாக்டர் நாயுடு அவர்கள். அவருடைய பேச்சு எப்படியோ அதேபோல எழுத்தும் வெட்டு ஒன்று துண்டுஇரண்டாக இருக்கும்.

முதல்முதலாக அவரை எப்போது, எங்கே பார்த்தேன் தெரியுமா? திருவையாற்றிலே காங்கிரஸ் பிரசாரம் செய்யவந்தார். காவிரி ஓரம் பூசப்படுத்துறை மண்டபத்தில் பெரிய கூட்டம். 'தென்னாட்டுத் திலகரே வருக', 'சிறை சென்ற தேசபக்தரே வருக' என்றுதெருவெல்லாம் வரவேற்புவளைவுகள் போட்டிருந்தார்கள். வரிகொடா இயக்கத்தை மகாத்மாகாந்தி ஆரம்பித்து நடத்திவந்த சமயம் அது. பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரைக்காக, டாக்டரைக் கைதுசெய்துசிறைத் தண்டனையும் அபராதமும் விதித்தனர். டாக்டர்நாயுடு, அரசாங்கத்துக்கு அபராதம் கொடுக்கமறுத்தார். அதற்காக, அவரது காரையும் ஏலத்தில் விட்டனர். ஆனால் அதை ஏலம்கேட்க யாருமே முன்வரவில்லை. பொதுமக்களிடையே அக்காலத்தில் அவ்வளவு தேசிய உணர்ச்சியும் கட்டுப்பாடுமிருந்தது. சிறையிலிருந்து விடுதலையடைந்ததும், தேசியப் போராட்ட பிரசாரத்துக்காக தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் தலைவர் என்ற முறையில்தான் திருவையாற்றுக்கு அவர் வந்தார். மக்களின் உற்சாகத்துக்குக் கேட்கவா வேண்டும்! அப்போது ஒருமாணவனாகஇருந்தேன். டாக்டர் நாயுடு அச்சமயம் முதலில் பேசிய ஒரு விஷயம் இன்னும் நினைப்பு இருக்கின்றது. திருவையாற்றிலே பிராமணசமூகத்தவர் அதிகம். ''பாப்பாரப்பஞ்சநதம்'' என்றும் கூறுவர். டாக்டர் நாயுடு கூட்டத்தைப் பார்த்துவிட்டு ''இந்த ஊரில் பிராமணர் அதிகம். அவர்கள் புத்திசாலிகள். ஆகவே தேசிய விடுதலைப் போராட்டத்தின் அவசியத்தைப் பற்றி அவர்களுக்கு விளக்கத் தேவையில்லை'' என்ற பீடிகையுடன், கூட்டத்தினரின் மனதைக் கவர்ந்துவிட்டார். அவரது குரல் வெண்கலநாதம். பேச்சு உணர்ச்சி மிக்கது; நகைச்சுவை நிறைந்தது. அக்காலத்தில் ஒலிபெருக்கிகள் கிடையா. என்றாலும் பெருங்கூட்டத்திலும் நன்றாகக் கேட்கும். மக்களின் மதிப்பை அமோகம் பெற்ற அப்பெருந்தலைவரைப் பத்திரிகாலயத்தில் பார்க்கச் செல்லும்போது, அப்பழைய நினைவுகளெல்லாம் வந்தன.

ஃ ஃ ஃ

மேலே மூன்றாவது மாடியிலே மானேஜர் இருந்தார். எனது மனுவைப் பார்த்துவிட்டு, அதில் சில பகுதிகளை சிவப்புப் பென்சிலால் குறித்து, உள்ளே அனுப்பினார். சில நிமிடங்களில் தென்னாட்டுத் திலகர் முன் சென்று நின்றேன். அவர் ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தார். ''உங்களைப் பார்த்தால் ஒரு மாணவரைப் போலுள்ளது. பத்திரிகைத் தொழிலுக்கு அனுபவம் வேண்டுமே'' என்று ஆங்கிலத்தில் சொன்னார். சந்தர்ப்பம் கொடுத்தால் தானே அனுபவமும் ஏற்பட முடியுமென்று உடன் தயக்கமின்றி கூறியதும், ''நீங்கள் ஐயரா, ஐயங்காரா?'' என்றுஅடுத்தபடிகேட்டார். 'இரண்டுமில்லை. சாதாரண ... ''ஹ ... ன்'' தான்' என்றேன். உடனே பக்கத்து அறையிலிருந்த செய்தி ஆசிரியர் வேங்கடராஜுலு நாயுடுவை அழைத்து, எனக்கு மொழிபெயர்ப்பு 'டெஸ்ட்' கொடுக்கச் சொன்னார்.

அக்காலத்தில் ''பிரிட்டிஷ் ஆபீஷியல்வயர்லஸ்'' என்ற தந்திச் செய்திகளை அரசாங்கம் எல்லாப்பத்திரிகைகளுக்கும் இலவசமாக அனுப்பி வைக்கும். ஒரு வெள்ளைக்கார இராணுவ அதிகாரி இந்தியா வந்து பதவியை ஒப்புக் கொண்ட ஆங்கிலச் செய்தியை வெட்டி மொழிபெயர்ப்புக்காக, செய்தி ஆசிரியர் என்னிடம் தந்தார். புன்முறுவலுடன் அவர் அதைக் கொடுத்ததும், மிக மிக கவனமாக அதை மொழிபெயர்த்துத்தந்தேன். டாக்டர் நாயுடுவிடம், அவர் இதைக் கொண்டு கொடுத்ததும், ''பாக உந்தே ரம்மஞ் செப்பண்டா'' (நன்றாக இருக்கிறதே, வரச் சொல்லுங்கள்) என்று தெலுங்கில் சொன்னார். பக்கத்து அறையிலிருந்த எனக்குத் தெலுங்குதெரியுமென்று அவருக்கு எப்படித் தெரியும்? நம்பிக்கையுடன் சென்றேன். ''கர்னல்'' என்பதை ''கலனல்'' என்று எழுதியிருந்தேன். டாக்டர் நாயுடு 'கர்னல்' என்று எழுதவேண்டுமென்று திருத்தினார். ஒரு சிறிய மொழிபெயர்ப்பிலும் ஒரு தவறு வந்துவிட்டது! என்றாலும் அவர் நல்ல வேளையாக அந்தப் பொருட்படுத்தவில்லை. பெரிய கட்டுரையைக் கொடுத்து அதை மொழிபெயர்க்கச் சொன்னார். ஒரு மணி நேரத்தில் அதை மொழிபெயர்த்துக் கொடுத்ததும், மறுநாள் வருமாறு சொன்னார். என்னுடன் வேறு நாலைந்து பேர்கள், அதே வேலைக்கு மனுச் செய்து அவர்களும் மொழிபெயர்ப்பு 'டெஸ்ட்' எழுதினர்.

டாக்டர் நாயுடு ஆபீஸ் விஷயங்களையும்கூட தமது மனைவியாரைக் கலந்து கொண்டுதான் தீர்மானிப்பாராம். மொழிபெயர்ப்புகளை மனைவியாரிடம் கொடுத்து படிக்கச் சொல்லி, அது தெளிவாகப் புரிகிறதா என்று கேட்பாராம். மனைவியாரும் அறிவாளி. சீர்திருத்த நோக்கமும் தீவிர தேசபக்தியுமுள்ளவர். இல்லாவிட்டால் அவரது கணவனார் இவ்வளவு பெரிய தலைவராகவும் தியாகியாகவும் வரமுடியுமா?

மறுநாள் காலை, குறித்த நேரத்தில் ஆபீஸ் சென்று டாக்டர் நாயுடு அவர்களைப் பார்த்தேன். ''உங்களுக்கு எவ்வளவு சம்பளம் வேண்டும்'' என்று கேட்டார். சற்றே திகைத்தேன். அந்த வேலைக்கு எவ்வளவு ஊதியம் என்று ஒன்றும் தெரியாது. முதல்முதல் பார்க்கும் வேலை. ''சென்னையில் ஜீவிப்பதற்குத் தேவையானது போதும்'' என்றேன். மொழிபெயர்ப்பாளருக்கு அந்த ஆபீஸில் 35 ரூபாய் தான் ஆரம்பச் சம்பளமாம். ஆனால் எனக்கு 30 ரூபாய் என்று உத்தரவில் குறிப்பிட்டிருந்தது. அக்காலத்தில் அந்த முப்பதும், இக்காலத்து முன்னூறுக்கும் அதிக மதிப்பானதாகும். அன்று முதலே வேலையில் சேர்ந்துவிடும்படி உத்தரவாயிற்று. எனக்குச் சொல்ல முடியாத மகிழ்ச்சி. காலையில் எழுதிக் கொடுத்தது, மாலையிலே பத்திரிகையிலே அச்சில் வந்துவிட்டதைப் பார்த்துப் பார்த்துப் பெருமை.

என்னுடன் 'டெஸ்ட்' எழுதிய மற்ற யாரையும் நியமிக்கவில்லை. டாக்டர் நாயுடுவுக்கு 'பிராமணதுவேஷம்' என்று கூறப்பட்டதெல்லாம் எவ்வளவு அபத்தம். வீரவிளக்கு வ. வே. சு. அய்யர் நடத்திய சேரமாதேவிகுருகுலத்தில்சாதிப் பாகுபாடு இருந்ததைக் கண்டித்ததாலேயே அவரைப் பற்றி இவ்வித தப்பபிப்பிராயங்கள் இருந்தன. தங்கள் குலதர்மப்படி ஆசார அனுஷ்டானம் செய்து நியமமாக வாழும் பிராமணரை மற்றவர் இன்றுகூட கையெடுத்துக் கும்பிடுவதைப் பார்க்கிறோம். ஆனால் குலதர்மத்தை விட்டு, கூடாத பழக்கங்கள் கொண்டு, காசுக்காக எதுவும் செய்வதாயின், அவர்கள்மீது மற்றவர்களுக்கு எப்படி மதிப்பிருக்கும்? பிராமணர்கள் மூன்றுவேளையும் சந்தியாவந்தனமும் காயத்ரி ஜபமும் செய்யவேண்டுமென்று ஆசாரிய சுவாமிகள் வற்புறுத்துகிறார்கள். அவர்களுக்கு அதுவே பலமும் பாதுகாப்புமாகுமென்கிறார். என்றாலும் 35 வயதுக்கு மேல்தான் ஒழுங்காக சந்தி செய்ய ஆரம்பித்தேன். பிறரைப்பற்றிகூற எனக்கு வாய் ஏது?

முதல் நாளன்றேமாலையில் ஒரு கூட்டத்துக்குச்சென்று 'ரிப்போர்ட்' கொண்டு வர வேண்டுமென்று செய்தி ஆசிரியர் கூறினார். புகழ்பெற்ற நாடக ஆசிரியர் சம்பந்த முதலியார் தமது நாடக அனுபவங்களைப்பற்றி பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் தொடர்பிரசங்கம் செய்து வந்தார். அன்று ஆபீஸ் வேலை முடிந்ததும் இக் கூட்டத்துக்குச் சென்றேன். ''தமிழ்நாடு'' தினசரிப் பத்திரிகையாயினும், தனியாக ரிப்போர்ட்டர்கள் யாரையும் நியமிக்கவில்லை. உதவி ஆசிரியர்கள்தான், ஆபீஸ் வேலை முடிந்தபின் மாலையில் கூட்டங்களுக்குச் சென்று செய்தி கொண்டு வரவேண்டும். இதற்காக அரை ரூபாய் அலவன்ஸ் கொடுப்பார்கள்.

அன்று அக்கூட்டத்துக்கு சற்றே தாமதமாகச்சென்று தூரத்திலிருந்தே முதலியார் பேசியதை எழுதிக்கொண்டு வந்து பத்திரிகைக்குக் கொடுத்தேன். அக்காலத்தில் சென்னையில் மூன்றே தமிழ் தினசரிகள்தான். சுதேசமித்திரன், தமிழ்நாடு, திராவிடன். இம்மூன்றில் கடைசியானது ஜஸ்டிஸ் கட்சியினர் நடத்திய அரசியல் கட்சிப்பத்திரிகை. இவ்விதக் கூட்டங்களுக்கு அதன் நிருபர்கள் வருவதில்லை. மறுநாள் சுதேசமித்திரன் பத்திரிகையில் அக்கூட்டச் செய்தி அரைக்கலம்தான் வந்திருந்தது. 'தமிழ்நாடு' பத்திரிகையில் மூன்றரைக் கலம் வந்தது. மறுநாள் கூட்டத்துக்குச் சென்றதும் 'சுதேசமித்திரன்' நிருபரிடம் என்னை அறிமுகம்செய்துகொண்டேன். அவர் என்னை, முதலியார் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். பத்திரிகையில் தமது பேச்சு விவரமாகவும் சரியாகவும் வந்ததைப்பற்றிப்பாராட்டினார். அவர்ஆறு பிரசங்கங்கள் செய்தார். ஆறு கூட்டங்களுக்கும் சென்று விவரமான செய்திகளைத்தந்தேன். 'தமிழ்நாடு'வில் ருசிகரமான விவரங்கள் அதிகமாக வருவதைக்கண்டு 'சுதேசமித்திரனும்' அக்கூட்டத்தைப்பற்றி ஒரு கலத்துக்குமேல் செய்தி அளித்தது. பத்திரிகைகளுக்குள் இப்படிப் போட்டிகள் இருந்தால்தானே பொதுமக்களுக்கும் நல்லதாகும். ஆங்கிலப் பத்திரிகைகள் இத்தமிழ்க் கூட்ட நிகழ்ச்சிகளைப்பற்றி ஒன்றுமே வெளியிடவில்லை.

முதல்நாளே செய்தி ஆசிரியர் 'புறூவ்' பார்க்கவும் தெரியவேண்டுமென்றார். எப்படி 'புறூவ்' திருத்துவதென்று பக்கத்திலிருந்த அன்பர் நாகலிங்கம் சொல்லிக்கொடுத்தார். அவர் இப்போது கொழும்பிலே ஒரு தமிழ் தினசரியில் தொண்டாற்றி வருகிறார். இங்கு தமிழ் பத்திரிகைத் தொழிலில் அவரே மிகவும் அனுபவசாலி. பர்மா முதலிய இடங்களில் பத்திரிகைப் பணிசெய்தவர். 'Rocket' என்ற சொல்லுக்கு 'வாணவிமானம்' என்று புதிய தமிழ்ச்சொல்லை உடன் கண்டுபிடித்துப் பயன்படுத்தியவர்.

ஆபீஸில் மொழிபெயர்ப்பாளனென்றே எனது பதவியின் பெயராயினும், உதவி ஆசிரியர், ரிப்போர்ட்டர், புறூவ் ரீடர் முதலிய பல வேலைகளையும் முதல் நாளன்றே செய்யவேண்டியதாயிற்று. அங்கு செய்தி ஆசிரியரைத்தவிர, எல்லோருமே மொழிபெயர்ப்பாளர்தான். இந்தப்பெயர் பல உதவி ஆசிரியர்களுக்கும் பிடிக்கவில்லை. ஏன் இப்படியென்று விசாரித்ததில், உதவி ஆசிரியரென்றால் அதிக சம்பளம் தரவேண்டுமென்றே இப்படிப்பதவியின் பெயரைக் குறைத்திருப்பதாக ஓரன்பர் கூறினார். பெயர் என்னவானாலென்ன? முதல் நாளன்றே பத்திரிகைத்தொழில் எனக்கு மிகவும் பிடித்துவிட்டது.

உன் அன்புள்ள,
அப்பா.

# காலம் மறக்காத கவிஞன் - IV

தான்சமீனுக்குச்செல்லும்போது சிலநேரம் பாரதியையும் அவர் தந்தை அழைத்துச் சென்றிருக்கவேண்டும். இவ்வாறு தந்தையோடு சமஸ்தானத்திற்குச் சென்று வந்த சுப்பையா மிக விரைவில் சமீன்தாரின் தனிப்பட்ட செல்வாக்கைப் பெற ஆரம்பித்தார். வேறு எவருக்கும் இல்லாத வரவேற்பை இச்சிறுவன்பெறக் காரணம் அவர் பிறவிக்கவிஞராகவே அமைந்ததனாலேயாம். அந்த வயதிலேயே அண்ணாமலை ரெட்டியார் அவர்களின் காவடிச்சிந்து, நமது கவிஞருக்கு மனப்பாடம். தாயுமானவர்

## பிறவிக் கவிஞர்

பாடல், கம்பராமாயணம், திருக்குறள் முதலிய நூல்களைத் தந்தையார் இவரிடம் தந்து பயிலச் சொன்னதும் உண்டு. ஆயினும், அவரது உண்மையான ஆவல், தன் பிள்ளை ஒரு தமிழ்ப்புலவனாக வளர்வதைவிட, கணிதமும், ஆங்கிலமும் கற்று மேலைநாடு சென்று, விஞ்ஞானக் கல்விகற்று, தனதுபின்னைய நாளில் தான் உருவாக்கி வரும் கனவுகளை நனவாக்க வல்லவொரு விஞ்ஞானியாக -மேல்நாட்டு முறையில் தொழிற்கூடங்கள் அமைக்க வல்ல விற்பனனாக-வர வேண்டுமென்பதேயாகும்.

தந்தையின் விழைவுகளைப் பிள்ளை அந்த வயதிலேயே அறிந்து கொள்ளாமலில்லை. ஆயினும் பெருங்கலைப்புலவனாக வாழுகின்ற பாரதிக்கும், அருங்கலை விஞ்ஞானத்திற்கும் பொருத்தமில்லாத பெரிய இடைவெளியிருந்தது. புதிய புதிய கற்பனைகளைக் கவிதைகளில் படைத்துக் கொண்டிருந்த புலவன் புள்ளி விபரங்களோடும், புதைபொருள் ஆராய்ச்சிகளோடும் போராடமுற்படுவானா? தன்னறிவினாலேயே தரணியின் தன்மையெல்லாம் அளந்துபார்த்துஅறிய வல்ல அறிஞன், மண்ணியலையும், மருந்தியலையும்கண்ணை மூடிக்கொண்டு உருப்போட ஒப்புவானா?

விஞ்ஞானக்கல்விதனக்குப் பிடிக்காது என்பது சிறு குறை. விஞ்ஞானத்தைக் கற்பதற்காகவே தன்பொழுதெல்லாம் பயன்படுத்தப் படவேண்டும் எனத் தந்தை விதித்த விதி இருக்கிறதே, அதுவே பெருங்குறையாய் முடிந்து, அச் சிறுவயதிலேயே அடிமைத்தனத்தின் சிறுமை எத்தகையது என்பதை உணர்த்தியதோடு, அப்பிஞ்சு நெஞ்சில் உரிமை வேட்கை உந்திக்கிளம்பவும் காரணமாயிற்று.

இவ்வாறு தந்தைக்கும், மகனுக்கும் இடையேநடந்த

போராட்ட
களால் சு
கப்படுகிற
போடப்
கூப்பிட்டா
குள்ளே
பிணக்கு,
ணக்கு' எ
அடுக்கி
போவார்.
நேர்ந்த
இயந்திரத்
பாரதியின்
அடுக்குத்
வது அருமை
மிக்க ஆவ
வுடனும் க
னுக்குப் பே
தார். ஆ
தமிழ்ச் செ
துடன் அ
போகும்.
திருட்டைத்
கண்டுகொ
னும் வைத
சந்த அடு
விடுமோ
தகப்பன
ஏதோ ஒரு
குப் போட
விழித்துக்
தைத் தகப்
'இது என்
றார். உ
உரக்கவே
குழி, வழி,
கூறிக் க
போட்டுவி
னுக்குச் சி
என்று எண்
மனம் ஏங்கி

அப்பாவி
ஆசிரியரிட
கைவரிசை
துண்டு.
கதையில்,
நிகழ்ச்சியை
குறிப்பிடுகி
சங்கரன்,
கிலப் பள்
3-வது வகு
றான். அ
'மிடில் ஸ்கூ
பள்ளிக் க
போனால்
தியாயர், '
யின்மேல்
என்பார்.
காகச் செ
நமது சின்
கையின்
கொண்டு
எதுகைகள
ருப்பார்.
கரும்பலகை
போட்டுக்
இவன்:
''புலவன்,

பலகை, உ
நில், நெல்
செ

வெல், வல்
கணக்கு,

என்று தன
டிக்கொண்
வாத்தியார்
என்று ஒரு
போட்டு
கொண்டு
ரனை நோக்
புள்ளியை
தின்மேல்
பார்ப்போ
இவன் மறு
மல் பித்
போல இரு
''என்னடா
என்று கே
பிறகு, அடு
வினவுவார்.
ஏது சொல்
தைக் கூடக்
இவன் மன
இழி, கிழி,
அழி, பழி,
புள்ளி, உ
அள்ளி, க
தெள்ளி' எ
கொண்டே
தமிழ்ப் பா
மாத்திரம்
னிப்பான்.
கணம் தட
ஆனாலும்,
ஆசிரியர்

சு. சண்முகம் எம். ஏ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டம் வ. ரா. அவர்களால் சுவையாகச் சித்திரிக்கப்படுகிறது. "கணக்குப் போடப் பையனைத் தந்தை கூப்பிட்டால் பாரதிமனதிற்குள்ளேயே 'கணக்கு, பிணக்கு, மணக்கு, ஆமணக்கு' என்று தொடர் அடுக்கிக் கொண்டே போவார். இயந்திரத்திற்கு நேர்ந்த கதியும்அதுதான். இயந்திரத்துக்கு மட்டும் பாரதியின் கற்பனையிலே அடுக்குத்தொடர் அகப்படுவது அருமையா? தகப்பனுர் மிக்க ஆவலுடனும், தெளிவுடனும் கணக்கைப் பையனுக்குப் போதிக்களத்தனித்தார். ஆனுல் பிள்ளையோ தமிழ்ச்சொற்களை சந்தத்துடன் அடுக்கிக்கொண்டே போகும். இந்த வெள்ளைத் திருட்டைத் தகப்பனுர் கண்டுகொண்டார். ஏதேனும் வைதால் திட்டுக்கும் சந்த அடுக்கு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சமும் தகப்பனுருக்கு உண்டு. ஏதோ ஒரு சமயம், கணக்குப் போடாமல் பாரதியார் விழித்துக்கொண்டிருந்ததைத் தகப்பனுர் கண்டார். 'இது என்ன விழி?' என்ருர். உடனே பாரதியார் உரக்கவே 'விழி, பழி, குழி, வழி, பிழி, சுழி' என்று கூறிக் கணக்கிலே 'சுழி' போட்டுவிட்டாராம். பையனுக்குச் சித்தப் பிரமையோ என்று எண்ணித் தகப்பனுர் மனம் ஏங்கிப்போனுர்."

அப்பாவிடம் மட்டுமன்றி, ஆசிரியரிடமும் அவர் தம் கைவரிசையைக் காட்டுவதுண்டு. சின்னச்சங்கரன் கதையில், பாரதியே இந்நிகழ்ச்சியைச் சுவைபடக் குறிப்பிடுகிருர். "சின்னச் சங்கரன், கவுண்டனூர் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் 3-வது வகுப்பில் படிக்கிருன். அக்காலத்தில் இதை 'மிடில் ஸ்கூல்' என்பார்கள். பள்ளிக்கூடத்துக்குப் போனுல் சங்கரனை உபாத்தியாயர், 'புலவரே! பலகையின்மேல் ஏறி நில்லும்' என்பார். பாடங்களை ஒழுங்காகச் சொல்லாததுபற்றி, நமது சின்னப் புலவர் பலகையின்மேலேறி நின்றுகொண்டு மனத்திற்குள்ளே எதுகைகளடுக்கிக்கொண்டிருப்பார். உபாத்தியாயர் கரும்பலகைமேல் கணக்குப் போட்டுக்கொண்டிருப்பார். இவன்:

"புலவன், அலவன்,
வலவன்,
பலகை, உலகை, அலகை,
நில், நெல், வில், பல்,
சொல், அல், எல்,
கல், மல்,
வெல், வல்—
கணக்கு, வணக்கு,
இணக்கு"

என்று தனக்குள்ளே கூட்டிக்கொண்டு போவான். வாத்தியார் 00.2853+.... என்று ஒரு கணக்குப் போட்டு முடிவு கட்டிக்கொண்டு போகையில், சங்கரனை நோக்கி, "சங்கரன்! புள்ளியை எந்த இலக்கத்தின்மேல்போடுகிறது சொல் பார்ப்போம்" என்பார். இவன் மறுமொழி சொல்லாமல் பித்துக்கொண்டவன் போல இருப்பான். அவர், "என்னடா விழிக்கிருய்?" என்று கேட்டுத் திட்டிய பிறகு, அடுத்த பையனிடம் வினவுவார். அடுத்தவன் ஏது சொல்கிருன் என்பதைக் கூடக் கவனியாமல், இவன் மனதிற்குள், 'விழி, இழி, கிழி, பிழி, வழி, கழி, அழி, பழி, மொழி, ஒழி; புள்ளி, உள்ளி, பள்ளி, அள்ளி, கள்ளி, வெள்ளி, தெள்ளி' என்று அடுக்கிக்கொண்டே போவான். தமிழ்ப் பாடம் வரும்போது மாத்திரம் கொஞ்சம் கவனிப்பான். அதில் கூட இலக்கணம் தடவும்."

ஆனுலும், ஒரு சமயம் ஆசிரியர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, வாழை, கமுகு இரண்டையும் உட்பொருளாகக் கொண்ட சிலேடைச் செய்யுள் ஒன்றை உடனடியாக எழுதித் தந்தார் பாரதி. [தொடரும்]

...எம். ஏ.

## நினைவும் கனவும்

# குசலவ குமாரர் கதை புலவர்கள் புழுகு மூட்டையா?

காங்கேயன்

அயோத்தி மன்னன் அனுப்பிய யாகக் குதிரையைக் காட்டில் வசித்த குசலவ குமாரர்கள் பிடித்துக்கட்டிவிட்டு போர்க்கோலம்கொண்டு சண்டைக்குத்தயாராக நிற்கிருர்கள். சிற்றப்பன் பெரியப்பன் எல்லோரும் பெருஞ் சேனையுடன் வந்து அவர்களுடனே சண்டை போட்டு அடிபட்டுச் சாய்ந்துவிட, தந்தையாகப்பட்ட ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி போர்க்கோலம் கொள்கிருர். குசலவ குமாரர்கள் தமது பிள்ளைகள். வண்ணுன் சொல்கேட்டு வனம் விடுத்த வைதேகி பெற்ற செல்வங்கள் என்பது தெரியாமல் ஸ்ரீராமன் கோபங்கொண்டு அந்தப்பொல்லாத இராமபாணத்தை எடுத்து வில்லில் பூட்டி அவர்கள் மேல் இலக்குவைக்கும் சமயம் கொட்டகையில் ஒரே நிசப்தம். மேடையில் வைத்திருக்கும் கியாஸ் லாந்தர்களிலிருந்து உஸ் என்று ஓர் ஓசைமட்டும் கேட்கிறது. உஸ்... சத்தம் செய்யாதீர்கள். ஸ்ரீராமபிரான் ராமபாணம் தொடுக்கப்போகிருர். உலகம் அழியப்போகிறது என்று யுத்தகாலஅபாய அறிவிப்புச்சங்குமுழங்குவது போலிருக்கிறது. உஸ்... குசலவ குமாரர்களுடனே வாதிட்டு போரிட்டுக்களைத்துப்போன ஸ்ரீராமன் தமது பச்சை நிற லேஞ்சியால் ஒருதடவை முகத்து வியர்வையை ஒற்றிக்கொண்டு கோதண்டத்தைத் தூக்கி நிறுத்தி நாணேற்றி டங்காரம் செய்கிருர். இதோ ராமபாணம்வில்லில்தொடுக்கப்படுகிறது. வில்வளைகிறது. அம்பு 'ஜிவ்'வெனப் பாய்கிறது. ஐயையோ அந்தக் குழந்தைகள்! என்று உலகமே திகைத்து நிற்கிறது. அந்த இராமபாணம் எனப்பட்ட மகாசக்திஎங்கே எங்கே? எந்த வனத்தையும் ஆசிரமத்தையும் உலகத்தையும்நிர்மூலமாக்கக்கிளம்பிவிட்டதோ என்று எல்லோர் கண்களிலும் ஒரே ஏக்கம்-திகில்.

ஆனுல் என்ன ஆச்சரியம்! உலகம் எப்படித் தப்பிப் பிழைத்துவிட்டதுஸ்ரீராமன் ஏவிய அந்தப்பொல்லாத படைக்கலம் வண்ணுன் கட்டிய வெள்ளைத் துணிக்குள் அல்லவோ போய் சிக்கிக் கிடக்கிறது!

ஏன் இப்படி ஆயிற்று? கோதண்டராமன் வைத்த குறி தவறிப்போய் விட்டதா? அப்படிச்சொல்லிவிட முடியாது. குசலவகுமாரர்கள் தமது பிள்ளைகள் என்பதைத் தெரிந்துகொண்டு புத்திரபாசம் மேலிட, வேண்டுமென்றே இராமபாணத்தை ஆகாயமார்க்கமாகச் செலுத்தியிருப்பாரோ? ஆனுல் ஸ்ரீராமனின் இந்த குயுக்திக் கெல்லாம் இடம்கொடுக்காமல் குசலவ குமாரர்கள் சிற்றப்பனையும் பெரியப்பனையும் தீர்த்துக் கட்டியதுபோல தகப்பனுரையும் தேர்த்தட்டில் வீழ்த்தி விடுகிருர்கள். போர்க்களத்தில் தோல்வியுற்று இவ்வாறு சாய்ந்துபோன அயோத்தியாபுரி அரமனைவாசிகளின் ஆடை ஆபரணங்களையும் மற்றும் [காக்காய்] பொன்னுலான விலையுயர்ந்த அவர் தம் மணிமுடிகளையும் களைந்து கழற்றி எல்லாவற்றையும் ஒரு மூட்டையாகக் கட்டி போர்க்களத்தில் எங்கோ ஒரு முலையில் பதுங்கி மறைந்துநின்ற அநுமாரைப் பிடித்துஇழுத்துவந்து அவர் தலை மீது மூட்டையை வைத்து வால்மீகி ஆசிரமத்தில் தனித்திருக்கும் சீதாபிராட்டியிடம் திரும்புகிருர்கள். ஆடை ஆபரணங்களைப் பார்த்தமாத்திரத்தே ஜனககுமாரி கோவென்று கதறுகிருள். என்ன காரியம் செய்தீர்களடாபிள்ளைகாள்? யாருடனே சமர் புரிந்து வெற்றிமாலை சூடினீர்கள், ஐயோ குடிகெட்டதே என்று ஒப்பாரி வைக்கிருள். அநுமார் நின்றகோலத்தைப்பார்த்த போது அவளுக்குச் சிரிப்பும் அழுகையும் சேர்ந்து வருகிறது. இதற்குப் பின், திரிகாலமும் உணர்ந்தவால்மீகி மகரிஷி ஆசிரமம் திரும்புகிருர். எல்லாம் சுபமாக முடிந்து எல்லோரும் அயோத்தி நோக்கித்திரும்புகிருர்கள்.

இந்தி மொழியில் உள்ள இந்த உத்தர ராமாயணக் கதையிலே அநுமாரை குசலவகுமாரர்கள் வசப்படுத்தும் நுட்பம் இப்படியல்ல. போர்க்களத்தில் விசுவரூபம் காட்டிப் பயமுறுத்தி நின்ற அநுமார் முன் குசலவ குமாரர் கோஷ்டி - ஆசிரமத்துச் சிறுவர்கள் அத்தனைபேரும் போய் அவரைச் சூழ்ந்துகொண்டு ராமநாம பஜனை செய்கிருர்கள். அநுமார் தான் பெரும் ராம பக்தனுவாரே. சிறுவர்களின் ராம நாம பஜனை காதில் விழுந்ததும் அநுமாரின் விசுவரூபம் தாகுகவே குறுகிச் சிறுத்துப்போகிறது. சிறுவர்களுடன் சேர்ந்து ராம நாம பஜனை செய்து கொண்டே தன்னை மறந்த பக்தியில் கட்டுண்டு அவர்கள் பின்னுல்தன்வசமிழந்து செல்கிருர். பஜனைக்கோஷ்டி சீதாதேவியின் ஆசிரமத்தில் போய்த்தான் நிற்கிறது.

விடிய விடிய இராமாயண கதாப்பிரசங்கம் கேட்டானும் ஒருவன். விடிந்தபின் சீதைக்கு இராமன் ஆர் என்பது தெரியாமல் விழித்தானும். அவன் அப்பொழுது தான் கண்விழித்திருப்பான். அதுவரையில் இருந்த இருப்பாகவே குறட்டைவிட்டுத் தூங்கியிருப்பான். அவன் மேல் குற்றம் சொல்லிப் பலனில்லை. அவனைப்பொறுத்தவரை இராமாயணகதாப்பிரசங்கம் அவனுக்கு நீலாம்பரி பாடி தாலாட்டியது மாதிரி ஆகிவிட்டது. ஆனுல் விடிய விடிய கண்விழித்துக்கொட்டகையில் முன் வரிசையில் அமர்ந்து எங்கள்ஊர்குசலவ ராமாயண நாடகத்தைப் பார்த்தஒருவரிடம்பொழுது விடிகிறசமயம்கொட்டகைக்குள் வைத்தே நாடகம்முடியப்போகிற சமயம் வேண்டுமானுலும் 'இராமருக்கு சீதை ஆர்' என்று கேட்டுப் பாருங்கள். அவர் சொல்ல மாட்டார். இது விஷயம் ஸ்ரீ ராமனுக்கே அன்றிரவு முழுதும் தெரியாதிருந்த போது மற்றவர்கள் எப்படித் தெரிந்திருக்க முடியும்? அசுவமேதக் குதிரையைப் பிடித்துக்கட்டிவிட்டு அதைத் தொடர்ந்து வந்த அத்தனைபேரையும் அடித்து வீழ்த்தி வெற்றிவாகை சூடி நின்ற அந்த ஆசிரமத்துச் சிறுவர்களான குசனையும் லவனையும் அவர்களது அன்னையையும் ஒரு வன முனிவர் அழைத்துவந்து, மூச்சடக்கி கிடந்த ஸ்ரீ இராமனைத் தட்டி எழுப்பி "இவர்கள் உன் மனைவியும் பிள்ளைகளும் அப்பா" என்று தெரிவித்த பிற்பாடுதானே சீதை ஆர் என்பது ஸ்ரீ இராமனுக்கே தெரியவந்தது.

குசலவர் கதை இராமாயண மூல காவியத்தோடு சேராத கதை ஆதலால் ஒருவேளை இந்த அறியாமையும் தெரியாத்தனமும் மயக்கமும் இராமன் உட்பட அனைவருக்கும் ஏற்படுவதாக இருக்கக்கூடும். வண்ணுன் சொல் கேட்டு சீதையை இராமன் காட்டுக்கு அனுப்பிவைத்த கதை இராமாயண மூலகாவியத்தோடு சேராத கதையாம். அதாவது இடைக்காலத்தில் நுழைக்கப்பட்ட ஒரு கட்டுக்கதை என்கிருர்கள். மகா காவியங்களில் சுடர்விடும் பாத்திரங்களை வைத்துக்கொண்டு பிற்காலத்துப் புலவர்கள் அவிழ்த்த சொந்தப் புழுகு மூட்டைகளில் ஒன்றுதானும் உத்தரராமாயணம் எனப்படும் குசலவகுமாரர் கதையும். காளிதாசனின் சாகுந்தலம், புகழேந்தியின் நளவெண்பா மற்றும் அல்லி அரசாணிமாலை, பவளக்கொடியாள், அபிமன்னன்-சுந்தரிமாலை, கவிதாகூரின் சித்திரா என்பன எல்லாம் மகாபாரதத்தில் கருக்கொண்டு வளர்ந்த சிறு சிறு காவியப் படைப்புகள். இப்படி எல்லா மொழிகளிலும் பாரத, இராமாயண பிற சேர்க்கைக் கதைகள் உண்டாம். இவற்றில் பல, கம்பராமாயணம்போல காவியச் சிறப்புக் குன்ருத நல்ல படைப்புகளாகவே உள்ளன.

இவ்வாறு, பிற்காலத்தில் இராமாயண காவியத்தில் செருகப்பட்ட உத்தர ராமாயணம் எனப்படும் குசலவகுமாரர் கதைகளினுல் எல்லாம் என்ன ஆகிறது என்று கேட்டால் விடிய விடிய நடைபெறும் இராமாயணம் பொழுது விடிந்த பின்பும் முற்றுப் பெருமல் ஜனககுமாரியின் கஷ்டகாலம் துயரமும் துன்பமுமாக மேலும் வளர்ந்து நீடிக்கிறது.

[வளரும்]




**எழுச்சி:** செயற்பாட்டு இயக்கச் சிறப்புமலர் பெப்ரவரி-மார்ச் 1967.

ஆசிரியர்-ஆ. தேவராசன், கிடைக்குமிடம்- அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், 676, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3,

அரசாங்க எழுதுவினைஞர் சங்க செயற்பாட்டு இயக்கச் சிறப்பு மலரான 'எழுச்சி' மொழிக்கும், மக்களுக்கும், நாட்டிற்கும் எழுச்சியூட்டக் கூடியதாய் அமைந்திருக்கிறது. வாழ்வளிக்கும் நமது தேன்மதுரத் தமிழ் மொழியைப் புறக்கணிப்பதால் ஏற்படும் தீங்குகள் தெளிவு செய்யப்பட்டுள்ளன. நம்மை நாமே குழிதோண்டிப் புதைக்கும் நிலையில் இருந்து விடுபட எல்லாம் தமிழ் உறுதி செய்யும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் சிந்தனையைத் தூண்ட செந்தமிழ் கொண்டல் திரு. வி. க., பேராசிரியர் மு. வ. ஆகியோரின் கருத்துக் குவியல்கள் தரப்பட்டுள்ளன. எல்லாம் தமிழ்மொழி இயக்கம் ஒரு திருப்புமுனையை அடைய பாட்டாளி கூட்டம்- தொழிலாளர் அணிவகுக்கவேண்டும் என மலர் ஆசிரியர் தரும் கருத்து பொருத்தமானதாகும். தாய்மொழி ஆட்சியிலிருக்கத்தக்க இடங்களிலும் அந்நிய மொழியை [illegible] றசி என்று கூறுது வேறென்னவென்று கூறுவது? ஆதலால் நகரத்திலின்று எழுங்கிளர்ச்சி, நாட்டுக்கு உரியதாதல் அருமை. கிராமத்தினின்று எழுங்கிளர்ச்சியே நாட்டுக்கு உரிமை நல்குவதாகும். ஆகவே தேசபக்தர்கள் தங்கள் உழைப்பைக் கிராமத்தில் திருப்புதலே நலம்' என்கிருர் திரு. வி. க.

தமிழ் மக்கள் தமிழுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். நமது முன்னேற்றத்திற்கு இடராக இருக்கும் சாதிக் கொடுமைகள் நீங்க வேண்டும். தமிழ் மக்களின் உயர்ச்சிக்கு ஊன்றுகோலாகவிருக்கும் 'எழுச்சி' மலரில் இவை போன்ற உயரிய கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. 'எழுச்சி' பத்திரிகை தொடர்ந்து தமிழ் மக்கள் நலனிற்கு ஊக்கமும் ஆக்கமும் செய்யுமென நம்புகிருேம்.

**மகாசிவராத்திரி மலர்:** ஆசிரியர் - விமல் சொக்கநாதன். கிடைக்குமிடம்: இந்துமகாசபை இலங்கைச் சட்டக் கல்லூரி, கொழும்பு-12.

மனிதனை பூரணத்துவம் அடையச்செய்வது சமயமாகும். 'எல்லா உயிர்களிடத்திலும் அன்பாயிரு' என்பதே சமயங்களின் உட்பொருள். நமது நாடு இனமதபேதமின்றி முன்னேற்றமடைய மக்களிடையே சமய உணர்ச்சி பரவ வேண்டும். இந்தஉண்மையை உணர்ந்து சட்டக் கல்லூரி மாணவர்கள் இந்துமகாசபையைஉருவாக்கியுள்ளனர். ஒற்றைக் காலைத்தூக்கி ஓயாது நடம் புரியும் திருநீலகண்டர் முகப்பை அலங்கரிக்கும் 'மகாசிவராத்திரிமலர்' இந்துமகாசபையின் விழுமிய நோக்கத்தைவெளிப்படுத்துகிறது. இம்மலரில் பௌத்த அதிபரது வாழ்த்துச் செய்தியும் பௌத்தமாணவர் தலைவரினது கட்டுரையும் இடம் பெற்றுள்ளமை எம்மதமும் சம்மதம் என்ற சமரசநெறிமூலம் மாணவர்களிடையே தேசிய மறுமலர்ச்சி ஏற்பட்டுவருகிறதை ருசுப்படுத்துகிறது.

செந்தமிழ் வித்தகர் கி. வா. ஜகந்நாதன் ஐந்து

(10-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனிப்புச் செய்தி

பழமையும் பக்தியும் பேரறிவும் படைத்த என் தந்தையார் என்னைப்போலவே மருத்துவத்துறையில் ஈடுபட்ட ஒருவரையே எனக்கு மணம்முடிக்கவேண்டும் என்றநோக்குடன் வரன் தேடியலைந்த வேளையில் புதுமையும் புரட்சியும் நிறைந்த நாவலர்என்னை மணக்கவிரும்புகிறார் என்ற இனிப்புச் செய்தி அவருக்கும் எனக்கும் நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்கள்மூலம் எனக்குக்கிடைத்தது. அவரைப்பற்றி 'பூந்தோட்டம்' என்ற பத்திரிகையின் இதழ்களில் ஒன்றன் அட்டைப் படவிளக்கத்தின் வாயிலாகவும், நண்பர்கள்மூலமும் அறிந்திருந்தேன் ஆகையால் அவரே எனக்கு வாழ்க்கைத் துணைவராக ஆகக்கூடியவர் என்ற முடிவைக்கொண்டு அன்னாரையே எனக்குமணம் முடித்துவைக்கும்படி என் தந்தையாரிடம் கேட்டுக் கொண்டேன்.






# பேட்டி (2)

# என் கணவர்

### — திருமதி நெடுஞ்செழியன் —

## தந்தையின் திகைப்பு

மாற்றுக்கட்சியைச் சேர்ந்தவராக இருப்பதோடு, நிலையான வருவாயும் இல்லாத ஒருவரை நான்தேர்ந்தெடுப்பதைப்பற்றிக் கவலையும், தாலி கட்டாத திருமணம் தான் செய்யமுடியுமென்று அவர் வாதாடியதைக்கேட்டு திகைப்பும்கொண்ட என் தந்தையாரை இத்திருமணத்திற்கு இணங்கவைத்தது என்னுடைய நற்பேறும், நண்பர்களுடைய உறுதி மொழிகளும்தான்.

## எனதுஉறுதி

நான் பலர் முன்னிலையில் நாவலரை பதிவுத்திருமணம் செய்துகொண்டபொழுது எங்களை வாழ்த்த வந்திருந்த உற்றார் உறவினர், நண்பர்கள், டாக்டர்கள்முதலியவர்களில்பலர், என்னுடையமுடிவைப்பற்றி அவர்களுடைய திகைப்பையும், கருத்தையும் வெளிப்படையாகவே என்னிடம் வெளியிட்டனர். ஆனால் அறிவும், ஆற்றலும், நற்பண்பும், பெருந்தன்மையும், புன்சிரிப்பும் மிளிர்ந்த நாவலரைக் கணவராக ஏற்றுக்கொண்ட நான், பணம், பதவி, மாற்றோர் பழிப்புரை, உறவினர் கேலியுரை ஆகிய எவற்றையும் பொருட்படுத்தாமல் இல்லற வாழ்வை ஆரம்பித்தேன்.

அவரது கட்சியின் காரணமாகவும் கொள்கைகள் காரணமாகவும். துவக்கத்தில் அவரை அருவருப்புக் கண்களோடு நோக்கிவந்த என் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நாளடைவில் அவருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்புக் கிடைத்தபிறகு அவரை மதித்துப்போற்றிப் பாராட்டத்தலைப்பட்டனர்.

## தமிழில் ஆர்வம்

அரசியலில் ஈடுபாடற்ற, அரசியல் நிலைமைகளிலும், சிக்கல்களிலும் அக்கறை கொள்ளாத, அரசியல் கட்சிகளில் எவ்விதப் பற்றுமற்ற நானும், அரசியலை அலசி ஆராய்ந்து புரட்சிக்கொள்கைகளைப்பரப்பும் அரசியல் வெறிபிடித்தஅவரும், இனிய இல்லறவாழ்வு நடத்தும் பொழுது அரசாங்க அலுவலில் ஈடுபட்டிருக்கும் என் நிலைமையையொட்டிஎழுந்த இடர்ப்பாடுகள் ஏராளம். ஆனால் என் கணவரின் நேர்மையினாலும், பெருந்தன்மையாலும் சகல விதமான நெருக்கடிகளும் மறைந்தன. அரசியலில் நான் அக்கறை கொள்ளாவிட்டாலும், என் கணவரின் உறவுதான் தமிழில் ஆர்வம் கொள்ளவும், பகுத்தறிவு நெறியைக் கடைப்பிடிக்கவும் செய்தது.

## உயர்ந்த மனப்பான்மை

என் பெற்றோருக்கு மூத்த மகளாகிய நான் என் பெற்றோரையும், உடன்பிறந்தாரையும், ஆதரிக்கவேண்டியிருந்த நிலையை நன்குணர்ந்து, திருமண நாளிலிருந்து இன்றுவரையும், என்னையும் என் வருவாயையும் என் பெற்றோரிடமே விட்டுவைத்திருக்கும் மிகஉயர்ந்த மனப்பான்மை கொண்டவர் என் கணவர். இரக்கமுடைமை, இன்முகத்துடன் பேசுதல், பிறருக்குத்தொல்லையாக இல்லாமல் இருத்தல், நல்லவர்களிடத்தில் தாழ்ந்துபோதல், நாணயமுடன் இருத்தல் ஆகிய நற்பண்புகளையும் கொண்டவர் என் கணவர். தன்னை ஈன்றெடுத்த அன்னையாரிடமும் மிகுந்த அன்புகொண்டவர். உடன் பிறந்தோரின் நல்வாழ்க்கைக்காகவும், மகிழ்ச்சிக்காகவும் பாடுபடுபவர்.

## கடமைவீரர்

மனைவி, மக்கள், வீடு, சொத்து, சுகம் என்ற எண்ணமே இல்லாத அளவிற்கு கடமைப் பற்றுடையவர். ஆரம்பத்தில் இவர் போக்கையும், உறுதியையும் புரிந்து கொள்ளாத நான், ஒரு நல்லவேலையையும், நிலையான வருவாயையும், தேடிக் கொண்டு ஒரே இடத்தில் இருக்கும்படி அவரைமிகவும் மன்றாடி வேண்டிக்கொண்டதையும், அதற்கு அவர் அப்படித் தான் பிறருக்கு அடிபணிந்து வேலைசெய்ய இயலாது என்று விளக்கமாக எனக்கு எடுத்துரைத்ததையும், நினைக்கும் பொழுது, எனக்குஎன் அறியாமையைப் பற்றியும், தன்னலத்தைப் பற்றியும் எண்ணிச் சிரிக்கத் தான் தோன்றுகிறது.

நான் எனது முதல் மகனைப் பெற்றபொழுது, என் விருப்பத்திற்கு மாறாக தேனியில் நடைபெற்ற கூட்டத்திற்குச் சென்று சதிகாரர்களின் சூழ்ச்சியில் அவர் சிக்க இருந்த செய்தி என்னை வாட்டியது. என் தந்தையார் நோய்வாய்ப்பட்டு இறக்கும் தறுவாயில் இருந்த பொழுதும், முதலே ஒத்துக் கொண்ட ஒரு வெளியூர் கூட்டத்தை தவறவிடக்கூடாதென்று வெகு தூரத்திலிருந்த ஒரு சிற்றூரில் வீட்டுக் கவலையற்று கட்சிப் பிரசாரம் செய்துகொண்டிருந்த அவரின் கடமை உணர்ச்சிக்கு வேறு எடுத்துக்காட்டுகள் தேவையில்லை. மேற்படிப்பிற்காக நான் மேல்நாடு சென்ற நாளன்று. என்னை வழியனுப்பக்கூடிய நிலையில்கூட இல்லாமல் அவர் சிறைக்கூடத்தில் இருந்தார். அவர் வாழ் நாள் முழுவதும், ரயிலிலும் சிறையிலும் கழியுமோ என்றுகூட நான் எண்ணிக்கொண்டதுண்டு.

வீட்டில் தங்கும் சொற்ப நேரங்களில்கூட மனைவி, மக்கள் என்று கொஞ்சிக் குலாவும் இயல்பையே மறந்தவராய், பத்திரிகைகளுக்கு கட்டுரை எழுதுவதிலும், வெளியூர் தோழர்களின் தபால்களுக்கு பதில் எழுதுவதிலும் கண்ணும் கருத்து

[10-ம் பக்கம் பார்க்க]

> மனதுக்குகந்த மனைவியாகவும், இன்பதுன்பங்களில் பங்கு கொள்ளும் ஏற்ற துணைவியாகவும், அவசியமான போது ஆலோசனை கூறி வாழ்க்கைப் பாதையில் முன்னேற உதவும் உத்தமியாகவும், கணவனுடைய நலனே தனது நலன்எனக்கருதி அவன் இன்புற்றிருக்க எல்லாமே செய்யும் ஏற்ற பணிப் பெண்ணாகவும், உழைத்துச் சோர்ந்து ஒடுங்கிவிட்டகாலத்தில் உற்சாக மூட்டுபவர்களாகவும் இருப்பது குடும்பப் பெண்ணின் கடமையாகும்.
>
> —சரோஜினி சங்கர்

# வேதாந்தம்வேண்டாம்

### — 'வளர்மதி' —

இன்று நமது நாடு பொருளாதாரவளர்ச்சி, சமூகமுன்னேற்றம் ஆகியவற்றில் பின் தங்கியிருப்பதற்கு காரணம் பழைய வேதாந்தங்களை எல்லைகடந்து பேசிக்கொண்டிருப்பதேயாகும். பெண்கள் உயர்கல்வி கற்க ஆரம்பிக்கும்போது, பின் தொழில் பார்க்கச்செல்லும்போது, எத்தனை எதிர்ப்புகள் ஏற்பட்டன. அதேநிலை இன்று பஸ் கண்டக்டராகப் பெண்கள் நியமிக்கப்பட்டாலும் நிச்சயம் ஏற்படத் தான் செய்யும்.

## விவாத மேடை

இதைப்பார்த்து நங்கையர் பின்னிற்றல் கூடாது. இன்று சோவியத் நாடு, ஜேர்மனி போன்ற நாடுகளில் பெண்கள் எத்துறையிலும் பணியாற்றுகின்றனர். அந்நாடுகளின் வளர்ச்சி எவ்வளவு துரிதமாக வளர்ந்து வருகிறது.

ஆரம்பத்தில் பெண்கள் பஸ் கண்டக்டராக பணியாற்றுவது கொஞ்சம் சிரமமாகத்தானிருக்கும். பழகிய பின் மற்றத் தொழில்கள் போல் இலகுவாக இருக்கும். பஸ்ஸில் பிரயாணம் செய்பவர்கள் எல்லோரும் நல்லவராக இருக்க முடியுமா? கள்வர், குடிகாரர் போன்றபல தரப்பட்டவர்கள் பிரயாணம் செய்வார்களே? இவர்களையெல்லாம் பெண்கண்டக்டரால் கவனிக்க முடியுமா? என்று சிலர் கேட்கலாம். ஒரு கட்டுக் கோப்பின் கீழேயே சமூகம்வளர்ச்சியடைந்து வருகிறது. பஸ்ஸில் பிரயாணம் செய்வோருக்கும் மற்றைய பிரயாணிகளுக்குக் கஷ்டம்கொடுக்காமல் இருக்க குறிப்பிட்ட சில ஒழுங்குகள் இருக்கின்றன. அவைகளை இன்று பல பிரயாணிகள் அறியாமல் இருக்கின்றனர். இதனை எல்லோரும் அறிந்து பின்பற்ற வசதி செய்தல் இ. போ. ச. அதிகாரிகளின் கடமையாகும்.

நாட்டின் நலன் கருதுவோர், எதிர்கால வளர்ச்சி விரும்புவோர் நங்கையர் கண்டக்டராகப்பணியாற்றுவதை வரவேற்று ஊக்கம் அளிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.





## ஆட்டமும் பாட்டமும் நிறைந்தவள்

**உங்கள் குழந்தைக்கு ஆரோக்கியம், வலிமை, மகிழ்ச்சி நீங்களும் கொடுக்கலாம்.**

ஒரு குழந்தையின் உடல் உற்சாகமாக வளர்வதற்கும், கண்பார்வை தெளிவாக இருப்பதற்கும் வேண்டியது வைட்டமின் 'ஏ'. பலமுள்ள எலும்புகளுக்கும், உறுதியான பற்களுக்கும் வேண்டியது வைட்டமின் 'டி'. வைரமான சதைக்கும், களங்கமற்ற சருமத்துக்கும் வேண்டியது வைட்டமின் 'ஸி'. உங்கள் குழந்தைகளுக்கு இந்த வைட்டமின்கள் கிடைப்பதற்கு நிச்சயமான வழியொன்றுண்டு. அதாவது, அவர்கள் தினமும் "ஹலிபொறேஞ்" அருந்த வேண்டும்.

உண்மையில், வாழ்நாள் முழுவதும் சலதோஷம், தொற்று நோய்கள் வராதபடி எதிர்க்கும் சக்தியை உடம்புக்கு அளிப்பவை 'ஹலிபொறேஞ்'சில் அடங்கியுள்ள மூன்று பாதுகாப்பு வைட்டமின்களே.




# ஹலிபோரேஞ்

**உற்சாகமான வளர்ச்சிக்கும், உறுதியான விருத்திக்கும்**

**இது கிளாக்ஸோ-அலன்பறீஸ் (சிலோன்) லிமிட்டெட்டின் தயாரிப்பு.**

357/67


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன நடக்கிறது

## சுவர்க்கத்துக்கு செல்லவிரும்பாதவர்

ஆசிரியர்:- சுவர்க்கத்துக்குச் செல்லவிரும்புபவர்களெல்லாம் கையுயர்த்துங்கள் பார்ப்போம்.

அந்த வகுப்பில் கிட்டு வைத்தவிர எல்லோரும் உயர்த்தினர்கள்.

ஆசிரியர்: ஏன் நீ சுவர்க்கத்துக்குச் செல்லவிரும்பவில்லையா?

கிட்டு: பாடசாலைவிட்டதும் நேரேவீட்டுக்குவருமாறு என்னிடம் அம்மா கண்டிப்பாகக் கூறியிருக்கிரு.

## சத்திரசிகிச்சைக்கு பிளாஸ்டிக் கருவிகள்

* சத்திர சிகிச்சைக்குத் தேவையான பலவித கருவிகள் பிளாஸ்டிக்கில் செய்யப்பட்டு மேற்கு ஜெர்மனியில் மான்ஹீம் நகர மருத்துவ மனையில் தற்போது சோதனைசெய்து பார்க்கப்படுகின்றன. சத்திர சிகிச்சை நடக்கும்போதே சில சமயங்களில் 'எக்ஸ்ரே' படங்கள் எடுக்கப்பட வேண்டியிருக்கிறது. அந்தமாதிரியான சந்தர்ப்பங்களில் எஃகு அறுவைக் கருவிகள் என்றுல் 'எக்ஸ்ரே' திரையில் கறுப்பாகத் தென்படுகின்றன. பிளாஸ்டிக்கருவிகள்என்றுல் எதுவும் விழுவதில்லை. எனவே 'எக்ஸ்ரே' படம் எடுக்கும்போது எஃகு கிளிப்புகள் போன்றவற்றை அகற்றவேண்டிய அவசியம் நேராது. பிளாஸ்டிக் கருவிகளைப் பயன்படுத்துவதில் மற்ருெருநன்மையும்உண்டு. ஏதேனும் அவசர நேரத்துக்கு பிளாஸ்டிக் கருவிகளை உடனடியாகப் பயன்படுத்தலாம். கொதி நீரில் போட்டுப் பின்னர்தான் பயன்படுத்தவேண்டும்என்பதில்லை.

# இறந்த மனிதனுக்கு உயிரூட்ட புதிய ஆராய்ச்சி

இறந்த மனிதர்களைக்குளிரில் உறையவைத்துப் பின்னர் அவசியமானபோது மீண்டும் உயிரூட்டமுடியுமா?' என்பது குறித்து ஜெர்மன் விஞ்ஞானிகள் தீவிரமாகச் சோதனைகள் செய்துவருகிருர்கள். இம்முறையை சத்திரசிகிச்சைகளின்போதுமட்டுமே பயன்படுத்தமுடியும்என அவர்கள் கருதுகிருர்கள்.

சத்திரசிகிச்சையின்போது கடும் குளிரில் விறைக்கவைக்கும் முறையைக் கையாள்வதில் டாக்டர் வால்டர் பிரண்டல்தலைமையில் ஜெர்மன் விஞ்ஞானிகள் புதிய விவரங்களைக் கண்டுபிடித்துள்ளனர். மரணம் ஏன் நிகழ்கிறது? இருதயத்துடிப்பு நிற்பதாலேயோ அல்லது மூச்சுநிற்பதாலேயோ அல்ல; மூளையில் ஆணையிடும் அணுக்கள் அழிவதாலேயேமரணம் நேருகிறது. இதைவிஞ்ஞானிகள் கண்டுபிடித்ததில் மேலும் பல இரகசியங்கள் வெளிப்பட்டன. சத்திரகிச்சையின்போது இருதயத்துடிப்பை எட்டு நிமிடங்களுக்கு மேலாக நிறுத்திவைப்பது இப்போதுஅதிசயமாகக் கருதப்படுவதில்லை.

## செயற்கை 'மனிதனை' விஞ்ஞானிகள் உருவாக்கிவிட்டார்கள் !

* கலிபோர்னியாவில் உள்ள விஞ்ஞானிகள் செயற்கை 'மனிதனை' உருவாக்குவதில் ஓரளவுவெற்றி பெற்றுள்ளார்கள்.

இந்த 'மனிதனின்' உயரம் ஆறு அடி. தோல் பிளாஸ்டிக்கினல் செய்யப்பட்டுள்ளது. மூச்சுவிட, நாக்கை அசைக்க, கண்ணைத்திறந்துமூடக்கூட இந்த செயற்கை மனிதனல் முடியும்.

இப்போது உருவாக்கப்பட்ட செயற்கை மனிதன் சாதாரண மனிதர்கள் செய்யும் மற்ற வேலைகளையும் செய்யக்கூடிய நிலையை அடையச்செய்வதில் இந்த விஞ்ஞானிகள் மூச்சுவிட நேரமில்லாமல் உழைத்து வருகிருர்கள்.

## உலோக தாதுக்களை கண்டுபிடிக்கும் நாய்கள்

* உலோக தாதுக்களை கண்டுபிடிப்பதில் நாய்கள் தமது பேராற்றலை வெளிப்படுத்தியுள்ளன. 5 முதல் 7 மீட்டர்வரையான தாழ்ப்பத்தினுள்ளஇரும்புத்தாதுக்களை இவை கண்டுபிடிக்கின்றன. இரும்புத் தாது வளங்களைக் கண்டுபிடிக்க எங்கு குழிதோண்டவேண்டும் என்பதை நிர்ணயிப்பதில் இவை ஆச்சரியத்தை அளிக்கும் ஆற்றலைக்கொண்டுள்ளன. பின்லாந்தில் இந்த நாய்கள் இவ்வித பரிசோதனையில்முதலில் ஈடுபடுத்தப்பட்டன. இப்போது ரஷ்யாவில் இவற்றின் உதவியுடன் இவ்வித ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 51 மைல் நீளமுள்ள நூல்கள்

* லிப்சிக்கிலுள்ள [ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு] ஜெர்மன் நூல் நிலயத்திலுள்ள புத்தகங்களின் முழுத்தொகை 3,356,000 ஆகும். கடந்த ஆண்டில் 110,000புதிய நூல்கள்வாங்கப்பட்டன. இந்நூல் நிலையப் புத்தகங்களை ஒரே வரிசையில் வைத்தால் 51 மைல் நீளமாகும். 1913 முதல் இந்நூல் நிலையம் புத்தகங்களைச்சேகரித்து வருகிறது.

## நுளம்புக்கு பிரியமானவர்கள் யார்?

மனோதத்துவ நியதிக்கு உள்ளானவர்கள் ஆறறிவு படைத்த மனிதர்கள் மட்டுமல்ல. கொசுக்களுக்கும் அவை விரும்பும் மனிதர்கள் உண்டு. சுகாதாரமானவர்கள், கறுத்த நிறத்தவர்கள் ஆகியோரையே இவை கூடுதலாக விரும்புகின்றன. மற்றவர்களைவிட இவர்களை இவை 30 சதவீதம் கூடுதலாக நாடுகின்றன. கடுமையாகச் சுவாசிப்பவர்கள், சுறுசுறுப்பானவர்கள், வாசனைத்திரவியங்களைத் தடவிக்கொள்பவர்கள், கறுப்பு உடை அணிபவர்கள் ஆகியோரை கொசுக்கள் கூடுதலாக விரும்புகின்றனவாம். கொசுக்கடியிலிருந்து தப்ப கறுப்பு உடை அணிவதையும், வாசனைப் பொருட்களை உபயோகிப்பதையும் குறைக்குமாறு நிபுணர்கள் ஆலோசனை கூறுகிருர்கள்.

## கழுகுகள் மீது வழக்கு

இதுவரை கேள்விப்பட்டிராத புதுமையான வழக்கு, மேற்கு ஜெர்மனியில் கோப்லண்ட்ஸ் எனும் நகரில் நீதிமன்றத்தில் நடந்துவருகிறது. அடுத்துள்ள காடுகள் அடர்ந்த மலையில் வசிக்கும் ஒரு வேட்டைக்காரர், அண்மையில் அமைந்துள்ள கோட்டையில் வாழுகிற இரு பிரபுக்கள் மீது வழக்குப்போட்டிருக்கிருர். தனது வேட்டைப் பிரதேசத்துக்கு மேலாக, பிரபுக்களின் கழுகுகள் பறக்கின்றன. இதைத் தடுக்கவேண்டுமென்பதே வேட்டைக்காரரின் கோரிக்கை. இப்பிரபுக்கள், அபூர்வமான பருந்துகள், ஆந்தைகள், கழுகுகள் ஆகியவற்றை வளர்க்கிருர்கள். வானில் பறக்கும் பறவையைத் தாக்கும்வகையில் இக்கழுகுகளைப் பழக்குகிருர்கள்.

தன் வேட்டைப் பிரதேசத்தில் இக்கழுகுகள் பறந்து, தனது வேட்டைக்கு ஊறு விளைவிக்கின்றன என்று வேட்டைக்காரர் வழக்குப் போட்டிருப்பதால், இக்கழுகுகள் தங்கள் கூண்டுகளுக்குள் அடைபட்டுக்கிடக்கின்றன. மேற்கு ஜெர்மனியில் இவ்வித கழுகுகள் சுமார் அரை டஜன் தான் இருக்கின்றன.

## அவ்வளவு போதும்

கணவன்: ஒரு வருடத்துக்கு இருமுறை உனது தாயார் வீட்டுக்கு அனுப்பினுல் திருப்தியடைவாயல்லவா? மனைவி: ஆம், ஆம்.

கணவன்: அப்படியென்றுல் எவ்வளவு காலம் ஒவ்வொரு தடவையும் தங்கியிருந்துவிட்டு வருவாய்?

மனைவி: அதிக நாட்களுக்கல்ல, 6 மாதங்கள்மட்டும் தான்.

## நிலத்தைத் துளைத்துசெல்லும் றொக்கெட்டுகள்

நிலத்தைத் துளைத்துச் செல்லும் றொக்கெட்டுகளை சோவியத் விஞ்ஞானப் பேரவையின் சைபீரிய கிளை உருவாக்கியுள்ளது. இந்தச் சாதனம் மண்ணைத் துளைத்து மாபெரும் வேகத்தில் செல்லக்கூடியதாகும். இது 250 மிலி மீட்டர் சுற்றளவு துவாரத்தை ஏற்படுத்தும்.

எரி வாய்வு, நீர்க்குழாய்த் தொடர்களையும், டெலிபோன் தந்தித் தொடர்புகளையும் போட இந்த றொக்கெட்டுகளை [illegible]லாம்.

## தவக்கொழுந்து ...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

சிவானந்த வித்தியாலயத்தில் - சிவபுரியில் காட்சிக்கெளியனுக - தவத்திரு சுவாமி நடராஜானந்தர் அநாதை மாணவரின் ஐயனுக அரும்பணியாற்றியமை உலகம் அழியும்மட்டும் அழியாது நிலைநிற்பதொன்ரும். தாய் தந்தையற்ற குழந்தைகளின் நலம் கருதி- தந்தையாக - தாயாக - ஆசானுகச் சேவைசெய்த அவர் பெருமை சொல்லும் தரமன்று.

சிவானந்த வித்தியாலயம் முதலாக வவனியா, தாண்டிக்குளம் பிறமண்டு வித்தியாலயம் ஈருக துலங்கிய இராமகிருஷ்ண சங்கப்பாடசாலைகளின் முகாமையாளராய் பல்லாண்டு பணிபுரிந்தார் அடிகளார். பெரியார் செய்யும் சேவையை அவர்கள் உயிருடன் இருக்கும்போதே பாராட்டி நன்றிக்கடன் செலுத்தவேண்டும் என்பது எம்மனோர் ஆசை. இதன்பயனுக எழுச்சிமீதூர பதினறு ஆண்டுகளுக்குமுன் ஈழகேசரியில் சுவாமி நடராஜானந்தர் ஆற்றும் பணி என்ற முகவரியில் யான் எழுதிய எழுத்தோவியம் இன்று நினைவுக்கு வருகிறது. அவர் செய்த பணிக்கு இன்று அஞ்சலி செலுத்துவோம்.

சுவாமியவர்கள் சரி என்று காண்பதை சலியாது செய்து முடிப்பார். கல்லூரிகளின்- பாடசாலைகளின் வளர்ச்சி கருதிசெயற்பாலனவற்றைச் செய்யத்தவறமாட்டார். 1959-ம் ஆண்டு நான் வவனியா-தண்டிக்குளம்பிறமண்டு வித்தியாலயத் தலைமை ஆசிரியனுகப் பணிபுரிந்தபோது பாடசாலைப் பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை வகிக்குமாறு அடிகளாரைக்கேட்டபோது அவர் தந்த ஒரேபதில்இன்றும் என் இதயத்தில் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. "கொழும்பிலுள்ள பெரியவரை அழையுங்கள். அவர் வருவார்"- அடிகளார் தந்த இந்த ஆசி எமக்கு அநுகூலமாக நிறைவேறியது.

தூயஉள்ளம் படைத்தவர்கள் துறவியரன்ருே? அன்னுர் கூறும் அறிவுரையாவும் அரனுரையன்ருே?

சுவாமியவர்கள் புகைவண்டியில் மூன்ரும் வகுப்புப் பெட்டியை நாடுவதே பெருவழக்கம். ஆடம்பரவாழ்வை விரும்பியதுகிடையாது. உடலும் உள்ளமும் பக்குவமடையவேண்டுமென்ற இலட்சியத்தில் வாழ்ந்து காட்டியவர். அவர் வாழ்க்கை மனித சமுதாயத்திற்கு ஒளிவிளக்காக யாண்டும் உதவுவதாகும். அவர் நெறி கலங்கரை விளக்கம் போல ஆற்றுப்படை செய்வதாகும்.

### சாந்தி

ஸ்திர புத்தியற்ருேனுக்கு உத்தம மனோபாவம்ஏது? நற்பாவனையற்ருேனுக்கு மனச்சாந்தியேது? சாந்தியின்றேல் சுகமேது?

["கீதா போதனை"யில் காந்தி அடிகள்]




சென்ற் அந்தோனிஸ் குறூப்
516, ஸ்கினேஸ் வீதி தெற்கு, கொழும்பு-10.
டெலிபோன்: 4261, 4261.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரத்தில் உங்கள் பலன்

**பண்டித வித்துவான் எம். வி பாலசுந்தரம் பி ஓ. எல்., எவ். ஆர் ஏ. எஸ்**

மேடம்-இவ்வாரம்மத்திம பலன்களைத் தரும் வாரம் எனலாம். தேகாரோக்கியம் சிறிது பாதிக் கப்படும். தொழிற்கேடுண்டு. குடும்பத்தில் மகிழ்வுண்டாகும். இனக் கவலையேற்பட்டு வருந்துவார்கள். வியாபாரத்தில் அதிகலாபமுண் டாகும். செலவுகள் அதிகமேற்பட்டு தொல்லைகள் தரும் வாரமாகும்.

இடபம்-இவ்வாரம்சிறந்த வாரமாக அமைந்தபோதிலும் தொல்லைகள் பல நிகழும் வாரமாகவே காணப்படும். களத்திரசுகம் இருந்தபோதிலும் வீண்வாக்குக்கலகத்தால் கலக்கம்அடைவார்கள். வழக்கு வகையில்பலர் ஈடுபட வேண்டியும் வரும். உத்தியோகவகையில் உள்ளவர்களுக்குஅற்ப முன்னேற்றமுண்டாகும்.

மிதுனம்- இவ்வாரம் சிறந்த பலன்களைத் தரும் வாரமாகும். பழைய கடன்கள் நீங்கும். தேகசுகம் பாதிக்கப்படும். அரசாங்கத் தொழிலில் உள்ளார்க்குப் பல பெறுபேறுகளுண்டாகும். இவ்விராசியார்களில் ஆண்கள் மிகவும் கவனமாக நடந்துகொள்ளவேண்டும். இல்லையேல் பெண்களினுல் தொல்லைகள் உண்டாகும்.

கடகம்-இவ்வாரம்நன்மைகள் பல நிறைந்துள்ள வாரமெனலாம். பிரயாணிகள் கவனமாகப் பொருட்களை வைத்திருக்கவேண்டும். திருடர்களால் கவலை ஏற்படும். தொழில்வகையாளர்களுக்குப் பந்தயங்களினுல் பொருட்பேறுண்டாகும். வழக்கு வகையினருக்கு வெற்றியீட்டும் வாரமாகும். விரோதிகள் தொல்லைகளை உண்டாக்குவார்கள். சிலருக்கு எதிர்பாராத வகையில் அதிஷ்ட இலாபச்சீட்டால் திரவியப்பேறுண்டாகும்.

சிங்கம்-இவ்வாரம் மத்திம பலன்தரும் வாரமெனினும் நன்மைகள் அதிகமாக நடைபெறும். தேகாரோக்கியம் வாத பித்த நலிவினுல்பாதிக்கப்படும். வழக்கு வகையினருக்கு ஐயமேற்படும். தொழிலில் வியாபாரிகளுக்கு நிலைமாற்றமுண்டு. வார இறுதியில் சுகம் உண்டு.

கன்னி- இவ்வாரம்மிகவும் கஷ்டபலன் தரும் வாரமாகும். தொழிலில் பங்கம் ஏற்படும். தேகாரோக்கியம் சிறிது பாதிக்கப்படும். கடன் தொல்லையால் கவலைப்படுவர். வயிற்று வலி சம்பந்தமாக கஷ்டப்படுவர் பெண்பாலர். வியாபார வகையினருக்கு சிறிது இலாபமேற்படும். உத்தியோகத்தர்களுக்கு முன்னேற்றம் வார இறுதியில் உண்டு.

துலாம்- இவ்வாரம் துன்பங்கள் நிறைந்த வாரமாகும். தனதானிய வகையில் கொள்வனவுசெய்தல் இலாபம் அளிக்கும். தேகாரோக்கியம் நன்மையாகவே இருக்கும். தங்கள் காரியங்களைப் பிறரிடம் ஒப்படைக்கவோ இரகசியங்களைக் கூறவோ முடியாது. செலவுகள் அதிகமேற்படும்.

விருச்சிகம்- இவ்வாரம் நற்பலன்களைத்தரும் வாரமெனலாம். தனப்பெருக்கமுண்டாகும். தேகநலம்நன்ருக இருக்கும். காரியங்கள் வெற்றியாகும். இடையிடையே குடும்பத்தில் மனவேதனை யடையத்தக்கதான வாக்குவாதம் உண்டாகும். பித்தரோகத்தில் சிலர் மூளை வியாதியினுல் வருந்துவர்.

தனு- இவ்வாரம் மத்திம பலன்களைத்தரும் வாரமெனலாம். தேகாரோக்கியம்நன்ருகவே இருக்கும். பெண்களின் கொண்டாட்டத்தினுல் மானபங்கமடைய நேரிடும். கன்னிப்பெண்கள்கவனமாக இருக்கவேண்டும்.

மகரம்- இவ்வாரம் நற்பலன்கள் தரும் வாரமெனினும் கஷ்டபலன்களையே மிகுதியும் தரும் எனலாம். திரவிய லாபம் சிலருக்கு ஏற்படும். அதிஷ்டவகையில் பொருள் வரும். சத்துருக்களின் தொல்லையுண்டு. தேகாரோக்கியம் சிறிது பாதிக்கப்படும். கவலை பணவகையில் உண்டாகும். வியாபார வகையில் தொழில் சமபலிதம்.

கும்பம்-இவ்வாரம்மத்திம பலன்களையே தரும் வாரமெனலாம். தேகாரோக்கியம் குறைவடையும். குடும்பத்தில் இனசனக்கொண்டாட்டமுண்டாகும். வியாபாரம்இலாபகரமாகவே காணும். இனத்தவர்களில் சிலரின் தகவல்கள் மனவேதனையைக்கொடுக்கும். போட்டிவகையில் திரவிய லாபமுண்டு.

மீனம்- இவ்வாரம்மிகவும் நல்லவாரமாகாது எனினும் நற்பலன்களையேஅதிகமாகக் கொடுக்கும்வாரமெனலாம். திரவிய இலாபம் சூதுவகையினருக்கும் போட்டிவகையினருக்கும் உண்டு. இனபந்துக்களினுல் பலநன்மைகள் உண்டாகும். தேவைக்குப் பணம் வந்துகைகூடும். வியாபாரிகளுக்கு வியாபாரம் சாமானியமாகவே நடைபெறும்.

## என் கணவர்

[8ம் பக்கத் தொடர்ச்சி]

ஞாய் இருப்பார். தன் உடல் நலத்தையும், குழந்தைகளின் கல்வி, உடல்நலம் முதலியவற்றையும்கூட கவனியாமல் இருப்பதற்காக வெளிப்படையாகவே குறைபட்டுக்கொள்ளும், என்னை முகங்கோணும்படி பேசாமல் என் கேள்விகளுக்குச் சரியான பதில் இறுக்காமலே சிரித்து மழுப்பிவிடுவார். தாமே போதிக்கும் உண்மைகளைத் தாமே கடைப்பிடிக்க வல்ல கடமை வீரர்.

-யோகி

## நமது நூல் நிலையம்

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

மணித்துளிகளில் உருவாக்கிய அழகிய கவிதை எம்மதமும் போதிக்கும் கருணையின் பெருமையை கவிஞுக விளக்குகிறது. செல்விகள் சரோ. கனகரட்ணம், மனோ. சரவணமுத்து ஆகியோரின்கட்டுரைகளும் திரு. மு. சிற்றம்பலத்தின் சிறுகதையும் மலரில் இடம் பெற்றுள்ளன. ''விமல்'' சுவாமி, ஸ்ரீசத்திய சாயி பாபா பற்றிய விபரங்களைத் தொகுத்து அளித்திருக்கிருர்.

**பாடும் மீன்:** பங்குனி 1967. ஆசிரியர்: நீலாவணன், கிடைக்குமிடம்: பாடும் மீன், பெரியநீலாவணை, கல்முனை. விலை: சதம் 40.

'எங்கள் முகத்தை-இதயத்தை ஆத்மாவின் பரிபாஷையை - மொழி வளத்தை, எங்கள் சமுதாய ஏற்றத் தாழ்வுகளை நமக்கு நாமாகப் படைத்துப் பார்த்துக் கொள்ளக் கூடாதா? ஏனைய மானுட சமுதாயங்களோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்கும் உரைகல்லாக, நமது இலக்கியங்களை நாமே படைத்து நமது சமுதாய முன்னேற்றங்களுக்காக அவைகளைப் பயன்படுத்தக் கூடாதா?' என்றுபாடும்மீன், தான் சென்றுகொண்டிக்கும் பாதையை எழுத்துக்களால் பொறித்துள்ளது. மலரில் இடம்பெற்றுள்ள கவிதை, கட்டுரை, கதைகள், கேள்வி பதில் இலக்கிய அறிவைத் தூண்டக்கூடியனவாக அமைந்துள்ளன. இலக்கியப் பசியுள்ளோர் பாடும்மீனை வரவேற்றுச் சுவைத்து மகிழ்ச்சியடைவர் என்பதில் ஐயமில்லை.

**இளம்பிறை.** ஆஸாத் மலர்-ஏப்ரல் 1967. ஆசிரியர்: எம். ஏ. ரஹ்மான். கிடைக்குமிடம்: இளம்பிறை, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு-13. விலை: சதம் 30.

சித்திரைமாத இளம்பிறை ஆஸாத்மலராக வெளிவந்துள்ளது. டாக்டர் பி. சுப்பராயன், டாக்டர் பீம்சென் சச்சார் ஆகியோரது கட்டுரைகள் ஆஸாத் மலரைச் சிறப்பிக்கின்றன.

— பூரணி

### கீதை

எனக்குக் கஷ்டங்கள் நேரும் பொழுதெல்லாம் கீதாமாதாவிடமே ஓடுகிறேன். இன்றுவரை அதன் மூலமாகத் தேறுதலும் அடைந்திருக்கிறேன்.

[''கீதா போதனை'' யில் காந்தி அடிகள்]


# இளம் பற்களை உரமாக வளரச் செய்யவும்



உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்
என்றும் பாவியுங்கள்

# போர்ஹான்ஸ்

பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்த்துள்ளது.

## பெரும்பாலான பற்கள் ஈறு வியாதிகளினுல் இழக்கப்படுகின்றன

அரைவாசிக்கு மேற்பட்ட சிறுவர்களும் கிட்டத்தட்ட எல்லா இளைஞர்களும் ஈறு அழுகல் காரணமாக தமது பற்களை இழக்கின்றனர் என உலகச் சுகாதார நிபுணர்கள் ஒத்துக்கொள்ளுகின்றனர். பெரும்பாலான பற்கள் அழுகியல்ல ஆனுல் இவ் ஈறு வியாதியினுலேயே இழக்கப்படுகின்றன என இவர்கள் கூறுகின்றனர்.

உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளிலிருந்தே சிறுவர்களுக்கு உரமான வெண்ணிறப் பற்கள் வளரும். தினமும் போர்ஹான்ஸ் கொண்டு ஈறுகளைத் தேய்த்து பல் துலக்குவதால் ஈறுகள் உரமாகவும் உறுதியாகவும் வளரும். அத்தோடு, பற்களும் சுத்தமாயும் வெண்மையாயும் இருக்கும்.

இளமையில் நன்முறையில் கவனியாது விட்டபடியால்தான் பெரும்பாலான இளைஞர்கள் ஈறுவியாதிகளினுல் துன்பப்படுகின்றனர். இதற்கு தினமும் போர்ஹான்ஸ் பற்பசை கொண்டு பல்துலக்குதல் அவசியம். இதனுல் அவர்களது ஈறுகள் உறுதியாவதோடு பற்களும் வெண்மையாகவும் சுத்தமாகவும் இருக்கும்.

## ஒரு பல்வைத்தியரின் குறிப்புக்குத் தயாரிக்கப்பட்டது போர்ஹான்ஸ்

புகழ் பெற்ற பல் வைத்தியரான டாக்டர் ஆர் ஜே. போர்ஹான்ஸ் டி. டி. எஸ். என்பவரின் தயாரிப்பு முறைக்கு ஈறுகளை பாதுகாக்கவல்ல விசேட மருந்துகளைக் கலந்து தயாரிக்கப்பட்டது.

பொங்கும் நுரையினுல் பற்களை உரமாயும் வெண்மையாயுமோ, ஈறுகளை உறுதியாயும் ஆரோக்கியமாயுமோ வைத்திருக்க முடியாது. ஈறுகளைத் தேய்த்து பற்களைச் சுத்தஞ் செய்ய போர்ஹான்ஸ் போன்ற ஒரு விசேட தயாரிப்பு முறை அவசியம்.

ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே உரமான பற்கள் வளரும். ஈறுகள் எவ்வளவு காலத்திற்கு உறுதியாயும் ஆரோக்கியமாயும் இருக்கின்றனவோ அவ்வளவு காலத்திற்கு இவை உரமாயும் இருக்கும். போர் ... பழக்கம் இதனுல் உறுதியான ஆரோக்கிய ... ணிறப் பற்கள் விளங்கும்.

# உரம் பற்களை என்றும் இளமையுடன் காக்கவும்



உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும்
என்றும் பாவியுங்கள்

# போர்ஹான்ஸ்

பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்த்துள்ளது.


327/67

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## விளம்பரம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் யாத்திரீகப் பெருமக்களுக்கு ஓர் விசேஷ அறிவித்தல்.

அம்பிகை அடியார்களின் நலன் கருதி மேற்படி தேவஸ்தானத்திற்கு பிரதிஷ்டாபூஷணம் சிவசிறி ஐ. கைலாசநாதக்குருக்கள் அவர்களை விசேஷ குருக்களாக நித்தியப்படி கடமை செய்வதற்கு 14-1-67 முதல் நியமனம் செய்திருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
த. அமிர்தலிங்கம்,
கௌரவ காரியதரிசி.

ஸ்ரீ நாகபூஷணியம்மன் தேவஸ்தானம்,
தர்மபரிபாலனசபை,
நயினாதீவு.
1753



## பொதுக்கூட்ட அறிவித்தல்

வழக்கம்பரை இலாபநிதிச்சங்கப் பொதுக்கூட்டம் 1-5-67 திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலையில் நடைபெறும்.

அங்கத்தவர்களுக்குக் கூட்ட நிகழ்ச்சி விபரங்கள் அனுப்பியுள்ளோம். கிடைக்கப்பெறாதவர்கள் இதனை அழைப்பிதழாக ஏற்றுச் சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

V. T. இராமநாதன்,
காரியதரிசி.

1745



கடைசி 2 தினங்கள்
மனோஹரா
[யாழ்ப்பாணம்]
போயா தினங்களில்
3 காட்சிகள்
எம்.கே.ராதா-புஷ்பவல்லி
நடித்த
சம்சாரம்



நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஆனந்தன்-புஷ்பலதா
நடித்த
செங்கமலத் தீவு



REGAL - JAFFNA
Time: 4-15, 7-00 9-45 p. m.
Rock Hudson
in
A Very Special Favor
(Color)



## மனேஜர் தேவை

சுருவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

20—45 வயதுக்கு உட்பட்ட கனிஷ்ட தராதரம் அல்லது கூட்டுறவுப்பயிற்சி, அல்லது வியாபார அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம்: ரூபா 100/- — 150/- வரை [சகல படிகளுமுட்பட தராதரத்திற் கேற்ப]

பிணை: ரொக்கம்: ரூபா 2000/-. ஆதனம்: ரூபா 3000/-.

குடியிருப்பு வசதியுண்டு. உடன் நியமனம் வழங்கப்படும். 30-4-67க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

தலைவர்,
சுருவில்ப. நோ. கூ. சங்கம்,
ஊர்காவற்றுறை.
1746

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



5-வது வெற்றி வாரம்

தீவொளி [நுவரெலியா] — கிங்ஸ்லி [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்] — விஜிதா [ஹட்டன்]

சோதனைச் சுழலிலே சோதரர் இருவர்!
வேதனை விளிம்பிலே மாதர்கள் இருவர்!!
ஆண்டவனுக்கு சவால் விட்டான் ஒருவன்!
அண்ணனையே தடுமாறவைத்தான் ஒருவன்!!
கள்வனைக் காதலித்தாள் ஒருவள்!!

ஜெய்சங்கர் — எல். விஜயலக்ஷ்மி
மனோகர், அசோகன், வசந்தா,
தங்கவேலு, மனோரமா, கருணாநிதி
மற்றும் பலர் நடிக்கும்

இரு வல்லவர்கள்


எதிர்க்கட்சி

## தலைவர்கள் கோரிக்கை பிரதமர்பதில்

புதுடில்லி, ஏப்ரல் 24

உபஜனாதிபதி தேர்தலை பார்லிமெண்ட் மாளிகையில் நடாத்துவதால், வீண்கஷ்டமும், பணவிரயமும் ஏற்படுகிறதென்றும், ராஜ்யங்களின் தலைநகரிலேயே அதனை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்வதே நல்லதென்றும் ஏழு பார்லிமெண்ட் எதிர்க்கட்சித்தலைவர்கள் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தியிடம் கோரியிருந்தார்கள்.

தேர்தலுக்கான சகலநடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு விட்டதென்றும், இதனால் எவ்வித மாற்றங்களும் செய்ய முடியாதென்றும் பிரதமர் அவர்களுக்கு எழுதிய பதிலில் தெரிவித்துள்ளார்.

## இறந்தவரின் வயிற்றில் நஞ்சு

யாழ்ப்பாணம், திங்.

வண்ணார்பண்ணை ஐயனார் கோவில் வாசிகசாலை மண்டபத்தில் இறந்தநிலையில் கிடந்தசண்முகம் செல்லத்துரை [45வயது] என்பவரது மரணம் சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ், கனகரத்தினம் விசாரணைநடத்தினார்.

மரணமானவரின்சகோதரரான கந்தையா சாட்சியமளிக்கையில் காலஞ்சென்ற தனது சகோதரர் இன்னும் திருமணம் புரியவில்லை என்றும், நிரந்தரமான ஒருஇடத்திலும் அவர் வசிப்பதில்லை எனவும், கடந்த 5 வருடமாக அவர் சுகயீனமாக இருந்ததாயும் தெரிவித்தார்.

பிரேதபரிசோதனைசெய்த டாக்டர் எஸ். சுப்பிரமணியம் மரணமானவரின் வயிற்றில் நச்சுத்திராவகம்இருந்ததாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து அது என்ன நச்சுத்திராவகமெனப் பரீட்சிப்பதற்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## உலகமேடை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குவித்துவைத்துக்கொண்டு "அணுஆயுதங்களை உற்பத்தி செய்யக்கூடாது, அணு ஆயுதத்தடை ஒப்பந்தம் செய்துகொள்வோம்" என்று அமெகாவும் ரஷ்யாவும்உபதேசம் செய்து ஓரளவு அணுஆயுதப் பரீட்சைத்தடை ஒப்பந்தத்தை மாஸ்கோவில் உருவாக்கியதால்தான் சீனாவும் பிரான்சும் அதில் கைச்சாத்திட மறுத்தன. அணுஆயுதமற்ற நாடுகளுக்குப் பாதுகாப்பளிக்க அமெரிக்காவும் சீனவும் கூட்டாகவே தனியாகவோ உத்தரவாதம் அளித்தாலும்கூட இதை சீனாவும் பிரான்சும் மதித்து நடக்குமா? சீனாவை தனது நிரந்தரப் பகைவனாக இந்தியா கருதி, அதற்குப் பயந்து அமெரிக்காவிடமும் ரஷ்யாவிடமும்அணுஆயுதப் பாதுகாப்புக் கோரினால் "அஞ்சாதீர்கள் நாம் இருக்கிறோம்" என்று கூறி இந்தியாவிலேயே தளம் அமைத்துக் கொள்ளக்கூடும். இது தலைவலிபோய் திருகுவலி வந்த கதையாகவேமுடியும். இதைவிட சீனாவை நிரந்தரப் பகைவனாகக்கருதாமல் நண்பனாக்கிக்கொள்வது நல்லதே.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர் -விஜயகுமாரி
நடித்த
ஆனந்தி



## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நெற்காணி
கனகராயன் குளத்தில், யாழ்ப்பாணம்-கண்டி வீதியிலிருந்து 500 யார் தூரத்திற்குள் நீர்ப்பாசனவசதியுடன் 7 ஏக்கர் நல்ல விளைச்சலுடைய நெற்காணி விற்பனைக்கு இருக்கின்றது. தனி உறுதி உண்டு. விபரங்களுக்கு திருமதி வே. சின்னம்மா, மூளாய் வீதி, வட்டுக்கோட்டை என்பவருடன் தொடர்புகொள்ளவும். 1928

வீடும் வளவும்
யாழ்ப்பாணம் இல. 20, கண்டி வீதியிலுள்ள 3 பரப்பு 1 குழியும் விஸ்தீரணமுள்ள காணியும் நாலு படுக்கை அறைகள், ஸ்ரோஸ், வேலைக்காரர் அறை, சமையலறை, மின்சாரம், தண்ணீர்வசதி, வடிகால் முதலிய வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. கூடிய விலைகேட்பவர்களது விண்ணப்பம் கவனிக்கப்படும். விபரங்கட்கு B. S. ஜோசேப் சிலோன் மேச்சன்ற்ஸ் லிமிட்டெட், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1697
காணி

லவுட்ஸ்பீக்கர்:
மிகவும் நல்ல நிலையில் உள்ள கிறம்பியன் லவுட்ஸ்பீக்கர் செற் [25 வாட்] உடனடியாக விற்பனைக்குண்டு. விலாசம் 'சரஸ்வதி வாசம்' தாவடி. 1926

சேவல்கள்
மூன்று மாதச் சேவல்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சி. செ. முத்துக்குமாரு, 3, மணல்தறை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1935

### நன்றி நவிலல்

எமது புத்திரி செல்வி சத்தியலீலாவின் பூப்புனித நீராட்டு வைபவத்திற்குச் சமுகளித்து எம்மைமகிழ்வித்ததற்கும் ஆசிச்செய்திகள் அனுப்பியதற்கும் நாம்நன்றி கூறுகின்றோம். தனித்தனியே நன்றி கூற இயலாமைக்கு வருந்துகின்றோம். வ. இரத்தினமும் பாரியாரும், சூழானை, சுன்னாகம். 2385

### தேவை

கடைச்சல் பட்டடை அனுபவம் உள்ள வேலையாள் தேவை. சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். ராமகிருஷ்ணாஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1930

### தேவை

பெண்நெசவாளர்கள்
நெசவு வேலையில் அனுபவமுள்ள பெண்கள் நல்லூர், மட்டுவில், துன்னாலை முதலிய இடங்களில்வேலைபார்க்கத் தேவை. சேலைக்கு டிசைன் போடவும், அச்சிடவும் தெரிந்த ஆண்களும் பெண்களும்நல்லூரில் உள்ள சேலை அச்சிடும் தொழிற்சாலைக்குத் தேவை. இம்மாதம் 30-ம் திகதிக்குமுன் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். கொமன்வெல்த் என்ரர்பிறைசஸ், 'புஷ்பவாசா' துன்னாலை தெற்கு, கரவெட்டி. 1925

### கல்வி

வகுப்புகள்
யாழ்ப்பாணக் கல்வி நிலையம் -28-4-67-ல் வகுப்புக்கள் ஆரம்பமாகும். புதிய வகுப்புக்கள்1-5-67-ல் ஆரம்பமாகும். பொதுக்கல்வித் தராதரப் பத்திர உயர்தர வகுப்புக்கள்[G C.E. Advance Level Arts & Science], ஆங்கிலம் [சர்வகலாசாலைத் தேர்விற் சித்தியடைந்தோருக்கு விசேடஆங்கிலவகுப்பு நடைபெறும்], சிங்களம், கலைப்பகுதித் தகுதிப் பரீட்சை [G.A.Q.]. யாழ்ப்பாணக்கல்விநிலையம் 304/3, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். 1983

சிங்கள வகுப்பு:
எமது கலாசாலையில் ஆரம்ப சிங்கள வகுப்பு ஒன்று அண்மையில் ஆரம்பிக்கவிருக்கிறது. கல்வி பயில விரும்புவோர் ஆசிரியரோடு கலந்தாலோசிக்கவும். A. P. டானியல், தபாற்கந்தோரடி, கரவெட்டி. 1688

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும், மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### பிரிவுபசாரம்

பண்டத்தரிப்பு, சணி சேந்தான்குளம் கட்டளைக்குரவர்வண பிரான்சிஸ் இடமாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு சேந்தான்குளம் மீசாமைச்சேர்ந்த பத்தாவத்தை பிலிப்நேரியார் கோவில்மக்களால் அன்னருக்கு பிரிவுபசாரவிழா நடாத்தப்பெற்றது.



"லீடன்" LEYDEN
தயாரிப்புக்கள்
○ பெனியன்
○ ஸ்போட் சேட்
○ ரி சேட்
○ றெறி சேட்
○ றெறி பிளவுஸ்
○ பேபி வெஸ்ட்
○ கால் மேஸ்
(Nylon & Cotton)
லீடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாக்கு மூடைக்குள் கோவில் பொருட்கள்

## வவனியா பஸ் நிலையத்தில் மூன்று நபர்கள் கைது

வவுனியா, ஞாயிறு வவனியா பஸ்நிலையத்தில் வந்திறங்கிய மூன்று நபர்களை இன்று பொலிசார் சந்தேகத்தின்பேரில் சோதனை போட்டதில் தண்ணீரூற்றுக்கு அப்பால் சுமார் 5 மைல் தொலைவில் சைவக் கோயிலொன்றில் திருடப்பட்ட பொருட்களை அவர்களிடம் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நபர்கள் கொண்டு வந்த சாக்குமூடை ஒன்றை பொலிசார் சந்தேகத்தின் மீது சோதனையிட்டபோது அந்தமூடையில் கோவில் பொருட்கள் இருந்தனவாம். அப்பொருட்களில் ஒன்றில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

குத்துவிளக்கு, பஞ்சாலாத்தி, மணி, செம்பு, திருவாத்தி மற்றும் பூசைக்குரிய பொருட்கள் யாவும் அந்தமூடையில் இருந்ததாக அறியப்படுகிறது. கே. தேவதாஸ், வி. தங்கவேல், எஸ். சேத்தான்பிள்ளை ஆகிய அம்மூன்று சந்தேக நபர்களையும் பொலிசார் றிமாண்டில் வைத்துள்ளனர்.

# 5 வயது சிறுமியின் பரிதாப மரணம்

கிளிநொச்சி, திங். கையில் பணமில்லாத காரணத்தால் தனது பிள்ளையை உரிய நேரத்தில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல முடியாது பிள்ளையை பலி கொடுத்த பரிதாப சம்பவமொன்று இங்கு நிகழ்ந்துள்ளது. வட்டக்கச்சியைச் சேர்ந்த துரைராசா சாந்தலட்சுமி [5 வயது] கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானதைத் தொடர்ந்து நடைபெற்ற மரணவிசாரணையில் இறந்தவரின் தாயார் செல்வரத்தினம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

எனது குழந்தைக்கு வருத்தம் கடுமையாக இருந்தபோது கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்ல பணமிருக்கவில்லை. பின்னர் மிகுந்த கஷ்டப்பட்டு அயலவரிடம் இரண்டு ரூபா பெற்றுக்கொண்டு எனது பிள்ளையை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றேன். அங்கு அனுமதிக்கப்பட்டு எனது பிள்ளை மரணமானார்.

கிளிநொச்சி வைத்திய அதிகாரி டாக்டர் லூக்சூசைப்பிள்ளை பிரேதபரிசோதனை நடத்தினார். இயற்கை மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

### திருகோணமலை செய்திக்கடிதம்

# இடமாற்ற 'குழப்பம்'

## உத்தியோகத்தர் திரும்பிச் சென்றார்

— நமதுநிருபர் து. பாலேந்திரா —

திருகோணமலை, ஞாயிறு மாறுதல் உத்தரவின் பேரில் இங்கு வந்த அலுவலக உதவியாளர் திரும்பிச் சென்றார். தற்போது கடமையாற்றிவரும் உத்தியோகஸ்தர் மாறுதல்பெற மறுத்தார்,

திருகோணமலை கச்சேரியில் அண்மையில் ஒரு சுவையான சம்பவம் நிகழ்ந்தது. இங்கு ஓ. ஏ. ஆகக் கடமையாற்றும் திரு. பகவதாஸ் தனது கந்தோருக்குச் சென்றபோது தமது இடத்துக்கு நுவரெலியாவில் இருந்து திரு. தம்பிப்பிள்ளை என்ற உத்தியோகத்தர் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தன்பேரில் இங்கு வந்திருப்பதைக்கண்டு திகைப்புற்றார். இதுவிஷயம் உடனே அரசாங்க அதிபர் திரு சோமபாலகுணதீராவுக்கு அறிவிக்கப்பட்டு திரு. தம்பிப்பிள்ளை நுவரேலியாவுக்குத் திரும்பிப்போகும்படி பணிக்கப்பட்டார். திரு. பகவதாஸ் இங்கு கடந்த 3 வருடங்களாகக் கடமையாற்றுகிறார்.

ஃ ஃ ஃ

### கப்பல் மாலுமியிடம் களவாடினர்

இங்கு தேயிலை ஏற்றுமதிக்கென வந்து தங்கிய 'காடிகன் ஷையர்' என்னும் கப்பலில் நித்திரைசெய்துகொண்டிருந்த மாலுமியின் கையில் இருந்த கடிகாரத்தை வத்தையில் உள்ள 'விஞ்சமன்' ஒருவர் களவாடி ஓடியபோது வேறு பலர் ஓடிச்சென்று பிடித்துப் பொருளையும் மீட்டு வந்தார்களாம்.

ஃ ஃ ஃ

### 'சபாஷ் அலெஸ்'

திருகோணமலையில் அலஸ் தோட்ட விளையாட்டு வீரர் கட்கும் 'ஷைனிங் ஸ்ரார்' வீரர்கட்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்ட மோதலில் இரண்டு தடவைகளும் அலஸ் வீரர், ஷைனிங் ஸ்ரார் வீரர்களைத் தோற்கடித்தனர்.

### இரேக்கத்தில்

# அரசியல் வாதிகளல்லாத பன்னிருவர் மந்திரிசபை

ஏதென்ஸ், ஏப். 23 அரசியல்வாதிகளல்லாத பன்னிரண்டுபேர் கிரேக்க நாட்டின் புதிய மந்திரிசபையில் இடம்பெற்றுள்ளனர். இவர்கள்நேற்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர். இவ்வைபவத்தில்மன்னர் கொன்ஸ்டன்டைனும் கலந்துகொண்டார்.

கிரேக்கில் நடைபெற்ற இராணுவப் புரட்சிக்கு மன்னரின் ஆதரவிருந்ததாகஒரு செய்தி கூறுகிறது. மற்றொரு செய்தி, மன்னர்இராணுவப்புரட்சியை ஆதரிக்கவில்லையென்றும் புரட்சித்தலைவர் வெளியிட்ட முதல் பிரகடனத்தில் கையொப்பமிட மன்னர் மறுத்தாரென்றும் இப்பொழுது மன்னரும் ஒரு கைதிபோலவே இருப்பதாகவும் கூறப்படுகிறது.

# வாரசாரம்

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

காமராஜர், திரு. ரெஜி மைக்கேலின் கேள்வியொன்றுக்கு, ''இந்தக் கேள்வியை தி. மு. கழகத்தினரைக் கேளுங்களேன்; அவர்கள் தான் இப்போது சக்தியுள்ளவர்கள்'' என்று பதிலளித்தாராம். தோல்வியினால்ஏற்பட்ட ஆத்திரம் காமராஜரிடமிருந்து இன்னும் நீங்கவில்லை. அவர் அதிகம் பேசவே விரும்பவில்லையாம். இதற்குமாறாக திரு. அண்ணாதுரையோ, தேர்தலில் வெற்றி பெற்றதனால் தன்னை மறந்தநிலையில் 'பெருமிதம்' கொள்ளாமல் நிதானமாகவும் அடக்கமாகவும் நடந்துகொள்கிறார். எல்லோருடனும் அன்பாகவும் பணிவாகவும் பேசுகிறார். வாடகைச் சாரதி முதல் தினசரி பல துறைகளையும் சேர்ந்தவர்களுக்கு அண்ணா பேட்டியளித்து பதில் சொல்கிறார்.

இலங்கையிலுள்ள தமிழர்களுக்கும் திராவிட முன்னேற்றக்கழகத்துக்கும் எந்தவிதமான அரசியல் தொடர்புமில்லையென்றும் இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவுக்கு வெளியேயுள்ள தமிழர்களுக்கும் தி. மு. கழகத்துக்கும் அரசியல் தொடர்பு இல்லையென்றும், இனியும் இருக்க முடியாதென்றும் அண்ணா தெளிவுபடுத்தியிருக்கிறார்.

திரு. அண்ணாதுரையின் இந்த விளக்கம், கொண்ட பேட்டியை 'டெயிலிமிரர்' பத்திரிகை நேற்று முதல் பக்கத்தில் 'கொட்டை' எழுத்தில் பிரசுரித்திருக்கிறது. தமிழ் நாட்டில் தி. மு. க. வெற்றியை இங்கு 'அரசியல் இலாபம்' தேட உபயோகிக்கும் எதிர்க்கட்சியினரின் கண்களை இது திறக்கவேண்டும்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு ஏப்ரல் மாசம் 24-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தென்னாட்டுமக்கள்மீது இறைவனின் கருணை

## சைவமகாநாட்டில் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள் 'இறைவன்நீங்காதகருணை உள்ளவர். அவர் உருவமே கருணைதான். மானிடர்கட்கு வேண்டிய அத்தனை பண்புகளும், தன்மைகளும், தெய்வீக சக்திகளும் இறைவனது திருக்குறிப்பின்படி இந்தியாவின் தென்திசையிலுள்ள மக்களிடையே அதிகமாகவும் சிறப்பாகவும் உண்டு. அதனால்தான் அப்பர் சுவாமிகளை வடதிசையிலிருந்து தென்னாட்டுக்கு வரும்படி இறைவன் அழைத்து தேவாரம் பாடுவித்தாரெனஉணருவதற்கு இடமுண்டு.'

மேற்கண்டவாறு நேற்று முன்தினம் ஆரம்பமான யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரின் அகில இலங்கைச்சைவ மகாநாட்டின் மாலை நிகழ்ச்சிகளில் 'அப்பர் காட்டும்நெறி' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் பண்டிதர் செ. சிவப்பிரகாசம் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்குவழக்கறிஞரும் மேற்படிசபைத் தலைவருமானதிரு. ரி.முத்துசாமிப்பிள்ளை தலைமைவகித்தார்.

பண்டிதர் செ.சிவப்பிரகாசம் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:— 'மாணவர்களைத் திருத்துவதற்கு முன்னர் ஆசிரியர்கள் திருந்தவேண்டும். ஆசிரியர்களுடைய மனம் பக்குவமடைந்தால்தான்அவர்களால் மாணவர்களைத் திருத்தமுடியும். கல்வி கற்கக்கூடத் தகுதியற்றபலர் இன்றுஆசிரியர்களாகக் கடமையாற்றுவதைக் காணமுடிகிறது. இந்த நிலை மாறவேண்டும்.

### சுந்தரர் செந்தமிழ்

வித்துவான் க. கி. நடராஜன் 'சுந்தரர் செந்தமிழ்' பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:— அப்பர் சுவாமிகளும், சம்பந்தரும் பிறசமயத்தவர்களது பூசல்கள் நிறைந்த காலத்தில் பிறந்தார்கள். ஆனால்சுந்தரமூர்த்தி சுவாமிகள் அமைதியான காலத்தில் அவதரித்தார். சம்பந்தர், அப்பர் சுவாமிகளது தேவாரங்களைப் படித்துஊறித் திளைத்த பின்னரே சுந்தரர் தேவாரங்களைப்பாடினார். ஆனால் அவருக்கெனத்தனியானஒரு பண் உண்டு.

### திருஞானசம்பந்தர்

பண்டிதர் திருநாவுக்கரசு 'திருஞானசம்பந்தர்' பற்றிப்பேசுகையில் அவரது சமயத்தொண்டுகளை விரிவாக எடுத்துக் கூறினார். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளின் கதாப்பிரசங்கத்துடன் நேற்றைய விழா முடிவடைந்தது.விழா இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது.

# இலங்கைமாணவருக்கு நேர்முகப் பயிற்சி

லண்டன், ஏப்ரல் 23 வெளிநாட்டு மாணவருக்கான ஆலோசனைக் கழகம், கடந்த வருடம் பிரிட்டனில் பயிலும் எட்டு இலங்கை மாணவருக்கு வர்த்தக, கைத்தொழில் ஸ்தாபனங்களில் நேர்முகப் பயிற்சி பெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுத்தது. உள்ளூர் கல்விச் சபைகள், கல்லூரிகள், சர்வகலாசாலைகள்,கைத்தொழில், வர்த்தகம் ஆகியவற்றின் ஆதரவுடன் இயங்கும் இக்கழகம் 40 நாடுகள் சேர்ந்த 290 மாணவர்களுக்கு பயிற்சி அளித்தது.

பிரிட்டனில் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சரின் அங்கீகாரத்துடனேயே இப்பயிற்சித்திட்டம் நடைபெறுகிறது.கல்லூரி, சர்வகலாசாலைகளில் படிக்கும் மாணவர்கள் தம் விடுமுறை காலத்தின்போது பயிலவே இந்நேர்முகப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

# நாவலருக்கு ..,

[1-ம் பக்கத் தொடர்ச்சி[

ளுக்குத் தலைமைவகித்த முதலியார் திரு. செ. முத்துத்தம்பி தமது தலைமையுரையில் தெரிவித்தார்.

விழாவில் இந்துசாதனப் பத்திரிகையின் 75-வது ஆண்டு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது. முதற் பிரதியை திரு. நமசிவாயம் பெற்றார்.

காலை நிகழ்ச்சியில் திரு. மு. ஞானப்பிரகாசம் பேசுகையில் தெரிவித்ததாவது:— சைவசித்தாந்தம் சகவாழ்வுக் கொள்கையைக் கொண்டது. அது பழைய நெறி வாழ்க்கையில் அமைந்தது. இறைவனது உருவத்தையே 'சிவம்' எனப் பூஜிக்கும் இந்துமத மக்கள் சகவாழ்வுக் கொள்கையை அனுஷ்டிக்கவேண்டும். சைவ சித்தாந்தப் பேரனுபூதி தமிழ் இந்துமத மக்களுடைய அரும் பெரும் சொத்து. இதனை நாம் அடைய இறைவன் அருள் வேண்டும். அப்போது தான் நமது சமூகமும் சமயமும் வளர முடியும்.

''சேக்கிழார் கண்ட சுந்தரர்'' என்னும் பொருள் பற்றி பண்டிதர் மு. கந்தையா பேசுகையில், யோகம் என்றால் ஒன்றுபடுதல் என்றும், பரம் பொருளுடன் உயிர் இணைந்து ஒன்றுபடுதலையே சேக்கிழார் தோழமை நெறி எனச் சுட்டிக்காட்டியுள்ளார் எனவும் தெரிவித்தார்.

பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் பேசுகையில், பசுவின் சிறப்புக்கள் பற்றி ராமாயணம், மகாபாரதம் முதலியவற்றிலும், தேவார திருவாசகங்களிலும் நன்கு விளக்கப்பட்டுள்ளதாகவும் பசுவதையைத் தடை செய்ய நாம் அனைவரும் ஒன்று கூடி ஒத்துழைப்பதோடு சைவத்தின் ஆணிவேரான பசுவை அன்புடன் இல்லங்கள் தோறும் வளர்க்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

---

சுழிபுரம், சனி வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு அ.அமிர்தலிங்கத்துக்கு தேநீர் விருந்தளித்துக் கௌரவிக்க வழக்கம்பரை தமிழ் மன்றத்தினர் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளனர். திரு,அமிர்தலிங்கம் அவுஸ்ரேலியாவிலிருந்து தமது தொகுதிக்குத் திரும்புகின்ற அன்றே இவ் விருந்துபசாரம் நடைபெறுமாம்.

# உரியவர் பெற்றுக்கொண்டார்

காரைநகர்,சனி காரைநகரைச் சேர்ந்த மு.சபாபதி என்பவரிடம் தவறுதலாகச் சிக்கிக்கொண்ட ரேடியோப்பெட்டியை உரியவர் பெற்றுக்கொண்டார். சங்கானையைச் சேர்ந்த ஒருவர் தமதுரேடியோப்பெட்டிக்குப் பதிலாக வேறு சாமான்களடங்கிய சபாபதியின் பெட்டியைக் கொண்டு சென்றிருந்தார். பிரயாணத்தின்போது இப் பண்டமாற்று நடந்தது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியான இதுசம்பந்தமான செய்தி,குறித்த இருவரும் தம்பொருட்களைத் திரும்பிப்பெறஉதவியது.


# தமிழ் பல்கலைக் கழக இயக்கம்

## செயல் முறை விவசாய கால்நடை பயிற்சி நிலையம், உப்புவெளி, திருகோணமலை.

18 மாத கால செயல் முறை விவசாய கால்நடை [தமிழ் மொழி மூலம்] பயிற்சி வகுப்பு ஒன்று மேற்கூறிய நிலையத்தில் நடத்தப்படும். பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் நிலையத்தில் வசிக்கவேண்டும். மேற்படி வகுப்பில் 25 மாணவர்கள் அளவில் சேர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வகுப்பில் சேர்வதற்கு தகுதி உடைமை பின் வருமாறு:

[அ] 17 — 25 வயதுக்குட்பட்ட ஆண்களாயிருத்தல் வேண்டும்.

[ஆ] கனிஷ்ட தராதர பத்திர பரீட்சை அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் விண்ணப்பதாரிகளின் கையெழுத்தால் நிரப்பப்பட்டு 1967-ம் ஆண்டு மே மாதம் 15-ம் திகதிக்கு முன் காரியதரிசி, தமிழ் பல்கலைக்கழக இயக்கம், 33, அலெக்சாந்திரா றோட்டு, கொழும்பு 6. என்ற முகவரிக்கு அனுப்பட்படவேண்டும். 1751


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org